பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 தை05 சனிக்கிழமை 18.01.2025 கதிர் 071

# அரசியல் கைதிகள் விடயத்தில் நீதி அமைச்சரின் மீது பாய்ச்சல்

## அவர் ஒரு இனவாதி என்கிறார் கஜேந்திரகுமார்

வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடி கைது செய்யப்பட்டவர்களை அரசியல் கைதியாக கணிக்க முடியாது என்று தேசிய மக்கள் சக்தியின் நீதி அமைச்சர் அறிவிப்பதற்கு ஒரே காரணம் இனவாதம்தான். இது கண்டிக்கப்பட வேண்டிய விடயம். இந்த நீதி அமைச்சர் கடந்த காலங்களில் இருந்த பிற்போக்குவாத நீதி அமைச்சர்களின் நிலைப்பாட்டுடன் இணைந்து போவது பலத்தஏமாற்றத்தைத் தருகிறது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும்நாடாளுமன்றஉறுப்பினருமான கஜேந்திரகுமார் தெரிவித்தார்.

அவர் யாழ்ப்பாணத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்து இதனைத் தெரிவித்தார்.அவர்மேலும்தெரிவித்ததாவது:



கடந்த வாரம் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கவேண்டும் என்று வலியுறுத்தி, முன்னாள் கைதிகள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் அரசியல் ☞2

### இனி அது ரகசியம் அல்ல!

பயங்கரவாதத் தடைச் சட்டம் குறித்த ஆளும்தரப்பின் நிலைப்பாடு கடுமையான விமர்சனங்களை எதிர்கொண்டபோதும் ஆட்சியாளர்கள்தமதுநிலைப்பாட்டை மாற்றிக்கொள்வதாக இல்லை என்று தெரிகின்றது. ☞2

## கலைப்பேராளுமை ‘குழந்தை சேர்’ விடைபெற்றார்



ஈழத்து தமிழ் நவீன நாடக உலகின் தாய் என்று வர்ணிக்கப்படுகின்ற கலாநிதி ம.சண்முகலிங்கம் (குழந்தை ) நேற்று தனது 93ஆவது வயதில் இந்த உலகில் இருந்து விடைபெற்றார். ☞8

## அரிசிப் பிரச்சினைக்கு இரு வாரங்களில் தீர்வு

### பிரதி அமைச்சர் தெரிவிப்பு

நாட்டில் அரிசிக்கு நிலவும் தட்டுப்பாடு மற்றும்விலையேற்றம்என்பன இன்னும் இரண்டு வாரங்களில் முடிவுக்கு வரும் என்று விவசாய மற்றும் கால்நடை பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன ☞9



### ஜனாதிபதித் தேர்தல் மூலம்

## ஜனநாயக மீள்தன்மையை உறுதிப்படுத்தியது இலங்கை

### ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புக் குழு அறிக்கை

இலங்கையின் ஜனநாயகத்தின் மீள் தன்மையை ஜனாதிபதித் தேர்தல் உறுதிப்படுத்தியுள்ளது என்று ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது. நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறும் ☞8

## நெல்லை களஞ்சியப்படுத்த உட்கட்டமைப்பு மேம்பாடு

### படைகளின் உதவியோடு

எதிர்வரும் பெரும்போகத்தில் நெல் கொள்முதல் செய்வதற்கு வசதியாக உட்கட்டமைப்புவசதிகளைமேம்படுத்தும் பொருட்டு ஜனாதிபதி அநுரகுமார ☞8

### 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர்

## அரசியல் விடுதலையை நோக்கி மட்டுமே சிந்தித்தமை பின்னடைவுக்குக் காரணம்

### யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய செயலர் கருத்து

2009 இற்குப் பின்னர் தனியே அரசியல் விடுதலையை மட்டும் நோக்கிச் சிந்தித்தமையே பின்னடைவுகளிற்குக்காரணமாகும். சமூகவிடுதலை, பெண்ணியவிடுதலை, வர்க்கவிடுதலைஎன்பவற்றில் கவனம் செலுத்தாமல் தமிழ்த் தேசிய எழுச்சியை வெளிப்படுத்த முடியாது. நாங்கள் அடையாள அரசியலிற்கு உரிய மக்கள் கிடையாது. நாங்கள் இறைமைஅரசியலைமுன்னெடுப்பதற்குரிய, ☞8

## பாடசாலை சமூகத்தை இலக்காகக்கொண்ட போதைப் பொருள்களை தடுப்பதில் தீவிரம்

### பதில் பொலிஸ் மா அதிபர் நடவடிக்கை

இளைஞர்கள் மற்றும் பாடசாலை சமூகத்தை இலக்காகக் கொண்ட செயற்கை கஞ்சா அல்லது ’கே டு சிட்’ போதைப்பொருளை தடுப்பதற்கு அனைத்து அதிகாரிகளுக்கும் அறிவித்து நடவடிக்கை எடுக்குமாறு, பொலிஸ் மா அதிபர்கள் பொலிஸ் நிலையங்களுக்கு அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த கஞ்சா உடலில் மிகவும் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துவதாகவும், மக்களை மனதளவில் மிகவும் குழப்பமடையச் செய்வதாகவும் கூறப்படுகிறது.

இதன்படி, பாடசாலைமாணவர்கள் போதைப்பொருள் பாவனைக்கு இட்டுச்செல்லக்கூடியவர்கள் மற்றும் இடங்கள் தொடர்பில் அவதானம் செலுத்துமாறு, பொலிஸ் மா அதிபர்கள் அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் பொலிஸ் பிரிவுகளுக்கும் அறிவித்துள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது

# மின் கட்டணங்கள் குறைப்பு

ஆறு மாத காலத்தை வரையறுத்து மின்கட்டணத்தை 20 சதவீதத்தால் குறைப்பதற்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது. இதற்கமைய நேற்று வெள்ளிக்கிழமை நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் மின்கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஆறு மாதத்துக்கு பின்னர் மின்கட்டணம் மீண்டும் திருத்தம் செய்யப்படும் என ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

வீட்டு பாவனை, பொது பயன்பாடு உட்பட எட்டு மின்பாவனை தொகுதிகளின் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது. இதற்கமைய ஹோட்டல் துறையின் மின்கட்டணம் 31 சதவீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது. ஆகவே இதன் பயனை குறித்த தொழிற்றுறையினர் பொதுமக்களுக்கும், நுகர்வோருக்கும் வழங்க வேண்டும் என ☞8

## ஊழியர் சேமலாப நிதியை செலுத்துவதில்லை யாழ்ப்பாண நிறுவனங்கள் மீது குற்றச்சாட்டு

### பணிப்பாளரிடம் பணியாளர்கள் முறைப்பாடு

யாழ்ப்பாணத்தில் தனியார் நிறுவனங்கள் பலதமது சம்பளத்திலிருந்து ஊழியர்சேமலாபநிதிமற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி என்பவற்றைக்கழித்தாலும் அவற்றைத்திணைக்களத்தில் கட்டியதற்கானபற்றுச்சீட்டுகள் அல்லதுஆதாரங்கள்வழங்குவதில்லை, மேலும் பல நிறுவனங்கள் அந்தப் பணத்தைக்கட்டாது ஊழியர்களை ஏமாற்றி அவர்களிடம் வேலை வாங்கி வருவதாக ஊழியர்கள் பலர் ஊழியர் சேமலாப நிதியம் உதவி பணிப்பாளரிடம்முறைப்பாடு வழங்கியுள்ளார்கள்.

முறைப்பாடு செய்த பின்னர் பணியாளர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணத்தில் நாம் ஒரு நிறுவனத்தில் பல வருடங்களாக வேலை செய்து வந்தோம். எமக்கு வேலைதரும்போது ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் போன்றவற்றுக்கு ☞2

## முன்னாள் அமைச்சர் மனுஷ முன் பிணை தரக்கோரி மனு

முன்னாள் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, தாம் கைது செய்யப்படுவதை தடுக்கும் வகையில் முன்பிணை கோரி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இந்த மனு தொடர்பான அவரது தரப்பு வாதங்களை முன்வைப்பதற்காக ஜனவரி 20 நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு அவருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் குற்றப் புலனாய்வு ☞2

## இனி இது .....

இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகள் தங்கியிருந்த அருகம்பே பகுதியில் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டார்கள் என்ற சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்ட மூவரையும்பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைத்திருக்க நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியது.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயங்கரவாதிகளுக்கு உதவிய குற்றச்சாட்டின் பேரில்இந்தமூவருக்கும்ஏற்கனவே90நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். பயங்கரவாதத்தடைச்சட்டத்தின்கிழேயேஇந்த உத்தரவு பொலிஸாரால் பெறப்பட்டிருந்தது.

மாலத்தீவு பிரஜை உட்பட மூன்று பயங்கரவாத சந்தேகநபர்களுக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. இவர்கள் மீதான குற்றச்சாட்-டுக்களை நிரூபிக்கத்தக்க ஆதாரங்கள் எவையும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத நிலையிலும் சந்தேகத்தின் பேரிலும் வெளிநாட்டுப் புலனாய்வு அமைப்புக்கள் வழங்கிய தகவல்களின் பேரிலும் இவர்கள் மீதான தடுப்புக் காவல் நீடிக்கப்படுகின்றது.

2024 ஒக்டோபர் 19 தொடக்கம், கடந்த ஜனாதிபதித் தேர்தலுடன் இணைந்து இந்தப் பயங்கரவாதத் தாக்குதலை நடத்தத் திட்டமிட்டமை தொடர்பில் 6 சந்தேகநபர்கள் நீதிமன்றில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் எஞ்சியுள்ள மூவரையும் தொடர்ந்து தடுத்து வைத்திருப்பதற்கான நீதிமன்ற உத்தரவைப் பெறவுள்ளனர் என்று பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஒருபக்கத்தில் அரசியல் கைதிகள் என்று எவரும் இல்லை என்று நீதி அமைச்சர் கூறுகின்றார். மற்றொருபுறத்தில் பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்ந்தும் தீவிரமாக அமுல்படுத்தப்படுகின்றது. அரசியல் கைதிகளின் விடுவிப்பு மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் நீக்கம் இவையிரண்டுமே அரசுத் தலைவர் தேர்தலில் அநுரகுமார திசநாயக்கவின் தேர்தல் அறிக்கையில் முதன்மைப்படுத்தப்பட்ட விடயங்கள். ஆனால் இன்று அதிலிருந்து விலகி முன்னைய ஆட்சியாளர்களின் பாதையிலேயே இந்த ஆளும்தரப்பும் தொடர்வதே நடக்கின்றது.

அரசியல் கைதிகள் என்று யாரும் இல்லை என்பதையேதான் ராஜபக்சக்களும் ரணிலும்கூடக் கடந்த காலங்களில் கூறிவந்தனர். இலங்கைச் சட்டங்களின் கீழ் தண்டனை பெற்ற பயங்கரவாதிகள்தான் சிறைகளில் அடைக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பதே அவர்களின் நிலைப்பாடாக இருந்தது. வெளிநாடுகளிலும் வெளிநாட்டுத் தலைவரிகளிடமும் அவர்கள் இதனையே தெரிவித்து வந்தார்கள்.

அரச உள்ளக உரையாடல்களிலும் அதிகாரிகள் மட்டக் கலந்துரையாடல்களிலும் அரசும் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டதுதானே என்று ரணில் விக்கிரமசிங்க போன்றவர்கள் பேசினாலும் பொதுவெளியில் அவர்கள் தமிழர் மற்றும் முஸ்லிம்களை மட்-டுமே பயங்கரவாதிகள் என்று விழித்தார்கள். அந்தப் மக்களுக்காகப் போராடியவர்களையும் பயங்கரவாதிகள் என்றே அழைத்தார்கள். இப்போது தேசிய மக்கள் சக்தியும் அதே பாணியைத்தான் பின்பற்றுகின்றது. போகிற போக்கில் ரணில் - ராஜபக்சு - அநுர ஆட்சியாகத்தான் இது இருக்கும் போலும்...

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## அரசியல்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியினரின் ஆதரவுடன் கையொப்பம் பெறும் போராட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு அது வெற்றி பெற்றுள்ளமையை நாங்கள் அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

விசேடமாக தமிழ் மக்களுக்காகப் போராடி ஒரு அரசியல் தீர்வைப் பெறுவதற்கான தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் மௌனிக்கப்பட்டபோது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தப் பயங்கரவாத தடைச் சட்டம் ஆட்சியாளர்களினாலேயெ ஒரு சட்டவிரோதமான, கொடூரமான, சட்டத்தின் ஆட்சியை மீறுகின்ற ஒரு ஆவணமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அந்தக் கருத்து ஸ்ரீலங்கா அரசினால் சர்வதேச மட்டத்தில் விசேடமாக ஐ.நா. பேரவையில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

அதாவது, பயங்கரவாதத் தடைச்சட்டம் ஒரு சட்டத்தின் ஆட்சி முறைக்கும், ஜனநாயகத்துக்கும் விரோதமான விடயமாகவும் கருதப்படுகின்றது.

அது முற்றிலும் நீக்கப்பட்டு ஒரு புதிய சட்டம் சர்வதேச சட்டத்துக்கு அமைவாக கொண்டுவரப்பட வேண்டும் என்றும், அல்லது இருக்கும் சட்டத்தை முற்றுமுழுதாக மாற்றியமைத்து சர்வதேச நியமங்களுக்கு அமைவாக மாற்றப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்தக் கொடூரமான பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட அனைவரையும் விடுவிக்க வேண்டும் என்ற கோஷம் மேலோங்கி நிற்கின்றது. இது கையொப்பம் பெறும் போராட்டம் ஊடாகவும், வேறு வழிகளிலும் வலியுறுத்தப்பட்டு வரும் நிலையில் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார அரசியல் கைதிகள் என்று யாரும் இல்லை என்று கூறுகின்றார். அவர் அதனைச் சொல்வதற்கு அரசியல் பின்னணிதான் காரணம்.

ஏனெனில் இதற்கு முதல் அவருடைய தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தேர்தல் காலத்தில் வடக்கு, கிழக்குக்கு வந்து சிறையில் உள்ள அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் என்று பேசியிருந்தார். ஆனால், தற்போது நீதி அமைச்சர் அந்த விடயத்திலிருந்து பின்வாங்குகின்றார். இதுவொரு அரசியல் காரணமாகத்தான் இருக்கவேண்டும்.

அந்தவகையில் தேசிய மக்கள் சக்தியின் ஜே.வி.பி. அமைப்பினரின் உறுப்பினர்களும் இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர். அவர்களும் அரசியல் கைதிகளாகவே இருந்தனர்.

இப்போதும்கூட அவர்கள் ஆட்சியில் இருந்திருக்காவிட்டால் வேறு ஒரு தரப்பு ஆட்சியில் இருந்திருந்தால், அவர்களது உறுப்பினர்கள் கைது செய்யப்படும்போது, அது அரசியல் நோக்கத்துக்கான கைதாகவே இருந்திருக்கும். ஆனால், அதே நிலையில், வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடி கைது செய்யப்பட்டவர்களை அரசியல் கைதியாக கணிக்க முடியாது என்று தேசிய மக்கள் சக்தியின் நீதி அமைச்சர் அறிவிப்பதற்கு ஒரே காரணம் இனவாதம்தான். இது கண்டிக்கப்பட வேண்டிய விடயம். இந்த நீதி அமைச்சர் கடந்த காலங்களில் இருந்த பிற்போக்குவாத நீதி அமைச்சர்களின் நிலைப்பாட்டுடன் இணைந்து போவது ஒரு பலத்தை ஏமாற்றத்தைத் தரும் விடயமாகும்.

இது தேர்தல் காலத்தில் வடக்கு, கிழக்கில் மாற்றம் என்று வந்த தேசிய மக்கள் சக்தியின் நாடகம் என்பதை நிரூபிக்கும் விடயமாகவே காணப்படுகின்றது - என்றார்.

## ஊழியர் ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணம் கட்டுவதாக கூறினார்கள்.

சம்பளத்தை மட்டும் வங்கியில் வைப்பிலிட்டார்கள் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் போன்றவற்றுக்கு பணம் கட்டவில்லை. அதற்கானவிண்ணப்பமும்நிரப்பப்படவில்லை. ஆனால் எமது சம்பள பணத்தில் மாதாந்தம் அதற்கான பணத்தை கழித்து வருகிறார்கள். எமக்கு சம்பளப் பட்டியல் தருவதில்லை. வங்கியில் பார்ப்பதன் மூலமே எமக்கான சம்பளம் கிடைத்துள்ளது தெரியவரும்.

நாம் எதைக் கேட்டாலும் எமக்கு காரணம் கூறி சமாளித்து விடுவார்கள். எனக்கு மட்டுமன்றி எம்மோடு வேலை செய்த பலருக்கும் இதே நிலைதான். சிலர் ஐந்து வருடமாக வேலை செய்தபோதும் அவர்களில் சிலருக்கு ஒரு சில மாதங்கள் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் போன்றவற்றுக்கு பணம் கட்டியுள்ளார்கள். அதற்கு பலருக்கு விவரங்கள் வழங்கப்படவில்லை. சிலருக்கு வழங்கப்பட்டுள்ளது.

எனினும் முறைப்படியாக எவருக்கும் சில நிறுவனங்கள் வர்த்தக நிலையங்கள் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் போன்றவற்றுக்கு பணம் கட்டுவதில்லை. நிறுவனத்தில் ஒருவர் வேலை செய்தால் இரண்டு வாரத்தில் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு அறிவிக்க வேண்டும் என்பது நடைமுறையில் உள்ள விதிமுறையாகும். இதை யார் நடைமுறைப்படுத்துகிறார்கள்? யார் கண்காணிப்பது? என்பதே தற்போதைய கேள்வியாக உள்ளது .

கடந்த காலத்தில் யாழ்ப்பாணத்தில் குறித்த தொழில் திணைக்கள அதிகாரிகள் சில வர்த்தக நிலையங்கள், நிறுவனங்களுக்கு திடீரெனச் சென்று ஊழியர்கள் நலன்கள் சம்பள விவரங்கள், ஊழியர் விவரங்கள் போன்றவற்றைக் கண்காணித்து நடவடிக்கைகள் எடுக்கும் நடைமுறை இருந்து வந்துள்ளது. தற்போது அவை நடைமுறையில் இருக்கிறதா என்பது கேள்விக்குறியாக உள்ளது.

இதேவேளை பாதுகாப்புச் சேவையில் ஈடுபடும் நிறுவனங்களிலும் இத்தகைய ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் போன்றவற்றுக்கு பணம் கட்டுவதாக கூறுகின்றபோதும் முறையான விவரங்கள் பாதுகாப்பு ஊழியர்களுக்கு வழங்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு இருக்கின்றது. அவர்களது வேலைநேரத்திலும் பல பிரச்சினைகள் காணப்படுகிறது.

குறிப்பாக நிறுவனங்களுக்கு பாதுகாப்பு சேவைக்கு ஆட்களை நியமிக்கும்போது அதிகளவான பணத்தை பாதுகாப்பு சேவை நிறுவனங்கள் பெற்றுக்கொள்கிறார்கள். ஆனால் வேலை செய்யும் ஊழியருக்கு முழுமையான நிதியை வழங்குவதில்லை. இத்தகையநிறுவனங்களையும்கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரச ஊழியர்களுக்கு பல்வேறுவிதமாக அரச சலுகைகள் கிடைக்கின்ற போதும் அரச சார்பற்ற தனியார், தனிநபர்களுக்கான சலுகைகள் தொடர்பில் அரசாங்கம் முறையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

ஒய்வுகால நிதியாக ஊழியர்களுக்கு இத்தகைய நிதி கிடைப்பதை உறுதி செய்வதற்கு ஆட்சியில் உள்ளவர்கள், வடக்கு மாகாண ஆளுநர் உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதே கோரிக்கையாக உள்ளது - என்றனர்.

## பாலியல் குற்றத்திற்காக

# நாடாளுமன்றப் பணியாளர்கள் மூன்றுபேர் உடன் பணி நீக்கம்

நாடாளுமன்ற பெண் பணியாளருக்கு பாலியல் துன்புறுத்தல் மேற்கொண்டமை தொடர்பில் குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்ட மூன்று நாடாளுமன்ற பணியாளர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்த விவகாரம் தொடர்பில் பல கட்டங்களாக விசாரணைகள் நடத்தப்பட்டு இதன் அடிப்படையில் மூன்று பணியாளர்கள் குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீரவின் பரிந்துரைக்கு அமைய குறித்த மூன்று பணியாளர்களையும் பணிநீக்கம் செய்வதற்கு சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன அண்மையில் ஒப்புதல் வழங்கினார்.

2021 மற்றும் 2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாடாளுமன்ற பெண் பணியாளர்கள் பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டமை தொடர்பில் 2023 ஜூலை 30 மற்றும் ஒகஸ்ட் 02ஆம் திகதிகளில் பத்திரிகைகளில் செய்தி வெளியானதைத் தொடர்ந்து அப்போதைய சபாநாயகரின் அறிவுறுத்தலுக்கு அமைய இது தொடர்பில் விசாரணை மேற்கொள்ள நாடாளுமன்றத்தின் அப்போதைய நிர்வாகப் பணிப்பாளர் தலைமையில் மூவர் அடங்கிய உள்ளக விசாரணைக் குழுவை நாடாளுமன்ற செயலாளர் நாயகம் 2023.08.04 அன்று நியமித்திருந்தார்.

இந்தக் குழு முன்னெடுத்த விசாரணைகளுக்கு அமைய நாடாளுமன்ற பணியாளர்கள் இருவர் இடைநீக்கம் செய்யப்பட்டிருந்ததுடன், குழுவின் அறிக்கை 2023.08.23ஆம் திகதி நாடாளுமன்ற செயலாளர் நாயகத்திடம் கையளிக்கப்பட்டது.

இது தொடர்பில் மேலதிக அறிவுறுத்தல்களைப் பெறுவதற்காக குறித்த அறிக்கை சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கு அமைய இது தொடர்பான விசாரணை பொலிஸ் மா அதிபரின் ஊடாக சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோகத் தடுப்புப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்தப் பொலிஸ் பிரிவின் விசாரணைக்கு அமைய மற்றுமொரு நாடாளுமன்ற பணியாளர் கைது செய்யப்பட்டு 2024.01.30ஆம் திகதி குறித்த பணியாளர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டார்.

இதற்கு அமைய இது தொடர்பில் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டதையடுத்து உரிய விசாரணை நடத்தப்படவேண்டும் என குற்றஞ்சாட்டப்பட்ட பணியாளர்கள் முன்வைத்த கோரிக்கைக்கு அமைய சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் ஒழுக்காற்று விசாரணையை நடத்துவதற்காக ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி குசலா சரோஜினி வீரவர்தன நியமிக்கப்பட்டார்.

இந்த ஒழுக்காற்று விசாரணையின் இறுதி அறிக்கை 2024.12.23 அன்று நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஹானி ரோஹணதீரவிடம் கையளிக்கப்பட்டது. இதனை அடிப்படையாகக் கொண்டு சம்பந்தப்பட்ட பணியாளர்கள் மூவரையும் இடை நீக்கம் செய்யப்பட்ட தினத்திலிருந்து பணி நீக்கம் செய்யுமாறு சபாநாயகரிடம் விடுத்த பரிந்துரைக்கு அமைய இவர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

## முன்னாள்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திணைக்களத்திற்கு அறிவித்தல் அனுப்புமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதன்படி, குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் பொறுப்பதிகாரி மற்றும் கடல்சார் குற்றப் புலனாய்வுப் பிரிவின் நிலையப் பொறுப்பதிகாரிக்கு அறிவித்தல் அனுப்புவதற்கு கொழும்பு தலைமை நீதிவான் தனுஜா லக்மாலி உத்தரவிட்டுள்ளார்.

முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார, ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் உள்ளிட்ட சட்டத்தரணிகள் ஊடாக தாக்கல் செய்த பிணை கோரிக்கை மனுவை பரிசீலித்ததன் பின்னர் நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இலங்கைக்கும் தென் கொரியாவிற்கும் இடையிலான விவசாய மற்றும் மீன்பிடித் தொழிலாளர் வேலைத் திட்டத்திற்கமைய மனுதாரர் கையெழுத்திட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் ஈ-8 விசா பிரச்சினை தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தினர் தமது கட்சிக்காரரான முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்காரவை கைது செய்வதற்கு தயாராகி வருவதாக சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

அத்துடன், மனுதாரர் தனக்குக் கிடைத்த அதிகாரங்களின்படி குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார் எனவும், அது தனிப்பட்ட ரீதியில் மேற்கொண்ட செயல் அல்ல எனவும் சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

ஒரு அமைச்சராக இரண்டு ஆளும்தரப்புக்களுக்கு இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் அவர் கையெழுத்திட்டார் எனவும், எனவே அவர் மீது குற்றவியல் வழக்கு தொடர முடியாது எனவும், மனுதாரருக்கு முன்பிணை வழங்குமாறும் சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் சமர்ப்பணங்களை முன்வைத்துள்ளனர்.

இந்த விடயங்களை பரிசீலித்த நீதிவான், குறித்த வழக்கை ஜவரி 20 ஆம் திகதி வரை ஒத்திவைத்து உத்தரவிட்டுள்ளார்.

# மட்டக்களப்பில் விவசாயத்துக்கு பயன்படாத நிலங்கள் அதிகம்

## பிரபு எம்.பி. சுட்டிக்காட்டு



மட்டக்களப்பு மாவட்டத்தில் விவசாயத்துக்கு பயன்படாத நிலங்கள் அதிகம் உள்ளன. கடந்த காலங்களில் இலங்கையில் இருந்து அரிசி ஏற்றுமதி செய்யப்பட்ட சந்தர்ப்பங்கள் இருந்தன. எனினும், தற்போது நாம் அரிசியை இறக்குமதி செய்ய வேண்டிய நிலைக்குதள்ளப்பட்டுள்ளோம். இவற்றையெல்லாம் மாற்ற வேண்டும் என்பதே எமது அரசாங்கத்தின் நோக்கமாகும் என தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதேச அபிவிருத்திக் குழுக்களின் தலைவருமான கந்தசாமி பிரபு தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் வியாழக்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் -

மட்டக்களப்பு மாவட்டத்தில் விவசாயத்துக்கு பயன்படாத நிலங்கள் அதிகம் உள்ளன. நீர்ப்பாசன திட்டங்களில் சில குறைபாடுகள் இருப்பதல் பெரிய நீர்ப்பாசன திட்ட வேலைகளை முன்னெடுக்க முடியாத நிலைமை காணப்படுகிறது.

முந்தனையாறு திட்டத்துக்கு குறைந்த அளவிலான நிதியை அரசாங்கம் ஒதுக்கியிருந்தபோதும் அத்தகைய திட்டங்களை முன்னெடுக்க முடியாமல் கைவிடப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இலங்கையில் இருந்து அரிசி ஏற்றுமதி செய்த சந்தர்ப்பங்கள் இருந்தபோதும் தற்போது நாம் அரிசியை இறக்குமதி செய்ய வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். இவற்றையெல்லாம் மாற்றி எமது வளங்களை சரியாக பயன்படுத்த வேண்டும்.

எமது அரசாங்கத்தின் நோக்கமான 'கிளீன் ஸ்ரீலங்கா' வேலைத்திட்டத்தின் ஊடாகவும் சுத்தப்படுத்தல் வேலைத்திட்டம் மட்டுமன்றி, சமூகத்தில் கட்டமைப்பை உருவாக்கி நாட்டை அபிவிருத்திப் பாதையில் கொண்டுசெல்ல வேண்டும் என்பதே எமது வேலைத்திட்டத்தின் நோக்கமாகும்.

பொருளாதாரத்தில் பின் நின்ற அரசாங்கத்தை நாம் அனைவரும் ஒன்றுசேர்ந்து, அதனூடாக எமது நாட்டை அபிவிருத்தி அடைந்த நாடாக மாற்ற வேண்டும் என்பதே எமது நோக்கம்.

மாவட்டத்தில் நெல் சந்தைப்படுத்தும் கட்டடங்களை புனரமைத்து அறுவடை செய்கின்ற வேளாண்மையை களஞ்சியப்படுத்த வேண்டிய நிதிகளை பெறுவதற்காக சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுடன் பேச்சுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் அவற்றுக்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. - என்றார்.

# மட்டு. களுதாவளைக் கடலில் கரை ஒதுங்கிய மர்மப் பொருள்

மட்டக்களப்பு மாவட்டம் களுதாவளைக் கடற்கரையில் வெள்ளிக்கிழமை மரமப் பொருள் ஒன்று கரை ஒதுங்கியுள்ளது.

நேற்று அதிகாலை வேளையில் கடற்கரைக்குச் சென்ற மீனவர்கள் தாம் இதுவரையில் அறிந்திராத மர்மப் பொருள் ஒன்று கரை ஒதுங்கியுள்ளதை அவதானித்துள்ளனர் எனவும், பின்னர் அதனைக் கரைசேர்த்து வைத்துள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இரும்பு உலோகத்தில் செய்யப்பட்டு அதன்மேல் பைபரினால் வார்க்கப்பட்டு இளம் நீலக் கலரில் கூம்பக வடிவில் அடைக்கப்பட்டதாக இப்பொருள் பெரிய அளவில் காணப்படுகின்றது. அதன் அடியில் 12 எல் எம் எனும் எழுத்துக்களும் காணப்படுகின்றன.

இப்பொருளின் மேற்பகுதியில் சிறியளவு வலைமுடிச்சு, ரயர்களும் காணப்படுகின்றன. இது பெரிய கப்பல்களின் ஒரு பாகமாக இருக்கலாம் என அப்பகுதி மீனவர்கள் தெரிவிப்பதோடு இவ்வாறு மர்மப் பொருள் கரை ஒதுங்கியுள்ளமை தொடர்பில் கடற்படைக்கு தாம் அறிவித்துள்ளதாகவும் அப்பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.




# சம்மாந்துறை மின்ஹாவுக்கு இளம் மணிச் செம்மல் விருது

(பாறுக் ஷிஹான்)



இந்திய தமிழ்நாடு, சிண்ணாளபட்டி, திண்டுக்கல் மாவட்ட 'பசுமை வாசல் பவுண்டேஷன்' அமைப்பின் ஐந்தாம் ஆண்டு துவக்க விழாவினை முன்னிட்டு சர்வதேச ரீதியில் பல்துறை சாதனையாளர்களுக்காக நடாத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்ற அல்-அர்சத் மகாவித்தியாலயத்தில் தரம் 08 இல் கல்வி கற்று வரும் இலங்கையின் இளம்பசுமை மீட்சி செயற்பாட்டாளர் துடிப்பும், துள்ளலும் கொண்ட மின்மினி மின்ஹாவுக்கு 'இளம் மணிச் செம்மல் விருது-2025' வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இவர் தனது 10 வயதிலிருந்து மாவட்டமட்ட, தேசிய மட்ட, சர்வதேச மட்டங்களில் 39 இற்கும் மேற்பட்ட விருதுகளினையும், கௌரவ பட்டங்களையும் பெற்றுக் கொண்ட சிறுமியாவார். 10 லட்சம் நபர்களை இலக்காய் கொண்டு 'சுற்றுச் சூழல் தொடர்பிலான விழிப்புணர்வு உரையினை நிகழ்த்தி வரும் ஆசிய நாடுகளில் மிக வயது குறைந்த சிறுமி' என்ற சாதனைக்குரிய இவர் சுயாதீன முறையில் கல்வி, நிருவாக உயரதிகாரிகளின் அனுமதியுடன் சுற்றுசூழல் தேசிய வேலைத் திட்டத்தின் ஓரங்கமாக இரண்டு லட்ச பாடசாலை மாணவர்கள், அரச அதிகாரிகள் முன்னிலையில் விழிப்புணர்வு உரையினையும் மேற்கொண்டுள்ளார்.

இவற்றுக்கும் மேலாக 'ஊனுக்கு உதவுவோம்' எனும் ஏழைகளுக்கும் விசேட தேவையுடையோருக்கும் பசியோடு வாழும் குடும்பங்களுக்கு உதவும் வேலைத் திட்டத்திலும் தன்னை ஈடுபடுத்திகொண்டுள்ளதுடன் இவ்வருடஇணையத்தள விருது சான்றிதழ் எண் 7சி-31 ஆனது கடந்த சனிக்கிழமை வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# உணவுப் பாதுகாப்புக்கு வேறு முயற்சிகளும் தேவை

பெரும்போக நெல் அறுவடை தொடங்கிவிட்ட நிலையில் இந்த ஆண்டு நெல்லுக்கு உத்தரவாத விலை வழங்கப்படும் என்று ஆளும்தரப்பு அறிவித்துள்ளது. அதுமட்டுமன்றி பெருமளவில் நெல்லைக் கொள்வனது செய்யப்போவதாவும் அறிவித்துள்ளது.

இதற்கான தயார்ப்படுத்தலாக இலங்கையிலுள்ள அனைத்து நெல் களஞ்சியங்களையும் சீரமைத்து மேம்படுத்தும் படியும் அதற்கான பௌதீக உதவிகளைப் படையினர் வழங்கவேண்டும் என்றும் அரசுத்தலைவர் அநுரகுமார திசநாயக்க அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார் என்றும் செய்திகள் வருகின்றன.

நெல்லுக்கான உத்தரவாத விலை மற்றும் அரிசிக்கான கட்டுப்பாட்டு விலைகள் தொடர்பிலான வர்த்தமானி அடுத்த வாரம் வெளியிடப்படுமென வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்திருக்கிறார். அதுமட்டுமல்லாமல் ஒட்டுமொத்த இலங்கையின் நெல் உற்பத்தியை ஒட்டுமொத்தமாகக் கொள்வனவு செய்யப்போவதாகவும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

''வருடாந்தம் 40 இலட்சம் மெற்றிக் தொன் நெல் உற்பத்தி செய்யப்படுகின்றபோதும் அவற்றில் 10,000 மெற்றிக் தொன் அளவிலான நெல்லே ஆளும்தரப்பால் கொள்வனவு செய்யப்படுகிறது. 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டு காலப்பகுதியில் விவசாயிகளிடமிருந்து சுமார் 5,000 மெற்றிக் தொன் அரிசியையே ஆளும்தரப்புக் கொள்வனவு செய்தது. அத்துடன் நெல்லை கொள்வனவு செய்து அவற்றை களஞ்சியப்படுத்தி வைக்கும் வசதி ஆளும்தரப்பிடம் இருக்கவில்லை. இவ்வாறான காரணிகளால்தான், தற்போது அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

அரசுக்குச் சொந்தமான நெற்களஞ்சியங்களை சீரமைப்பதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். இம்முறை பெரும்போக அறுவடையின் போது விவசாயிகளிடமிருந்து 3 லட்சம் மெற்றிக் தொன் வரையிலான நெல்லை கொள்வனவு செய்வோம்'' என்று அமைச்சர் தெரிவித்திருக்கின்றார்.

அமைச்சர் இவ்வளவு பெரும் தொகை நெல்லைக் கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்த முடியுமா? இலங்கையில் அரசால் பேணப்படும் 323 பெரும் கஞ்சியங்கள் இருக்கின்றன. 2021ஆம் ஆண்டுத் தரவுப்படி அவற்றின் கொள்ளளவு 3 லட்சத்து 23 ஆயிரம் மெட்றிக் தொன்கள். இது தவிர கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் மாவட்டச் செயலகங்களினால் பேணப்படும் களஞ்சியங்களும் இருக்கின்றன. ஆனால் இவை அரச களஞ்சிய வசதி அளவை மிஞ்சாதவை. இது தவிர ஐ.நா. உதவியுடன் சில சமூக மட்டக் களஞ்சியசாலைகளும் உள்ளன. இவற்றையெல்லாம் கூட்டிக் கழித்தால் அரசால் தாராளமாக பெரும்போக அறுவடை முழுவதையுமே கொள்முதல் செய்து களஞ்சியப்படுத்த முடியும்.

2024 சிறுபோகத்தில் மட்டும் இலங்கையின் நெல் உற்பத்தி 26 லட்சம் மெட்றிக் தொன்கள். இதுவே நாட்டின் அரிசித் தேவைக்குப் போதுமானது. இருந்தாலும் தற்போது அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. 2025ஆம் ஆண்டில் இலங்கையின் நெல் உற்பத்தி 50 மெற்றிக் தொன்களாக இருக்கும் என்று அமெரிக்க விவசாயத் திணைக்களம் எதிர்வுகூறியிருக்கின்றது. 2023 உரப் பிரச்சினை காரணமாக நெல் உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டிருந்தாலும் 2024 பெரும்போகத்தில் அது இயல்பு நிலைக்கு மீண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கணக்குகளை வைத்துப் பார்க்கும்போது நாட்டில் தேவைக்கு அதிகமாகவே நெல் உற்பத்தி இடம்பெறுகின்றது. ஆனாலும் ஒவ்வொரு ஆண்டும் கார்த்திகை, மார்கழி மற்றும் தை மாதங்களில் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்படும் நிலை உருவாகின்றது. எனில் அந்த நெல் எங்கே செல்கின்றது, எப்படிச் செல்கின்றது என்பதைக் கவனத்தில்கொள்ளவேண்டும். ஆண்டின் இறுதியில் அரிசியைப் பதுக்கி இலாபம் பார்க்கும் அரிசி ஆலை முதலாளிகள் அறுவடைக் காலத்தில் அதனைத் தாராளமாகச் சந்தைக்கு அனுப்பி நெல் விலையைக் குறைப்பதன் மூலம் அடிமாட்டு விலைக்கு நெல்லை வாங்குகிறார்கள் என்று கணிக்க முடியும். இதனால் பாதிக்கப்படுபவர்கள் விவசாயிகள் மட்டுமே.

இந்த நிலையில் உற்பத்தியில் வெறும் 10 சதவீதத்தை மட்டும் கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்துவதன் மூலம் மட்டுமே இந்தப் பிரச்சினையைத் தீர்த்துவிட முடியும் என்று ஆளும்தரப்பு எண்ணுவது சாத்தியமான தீர்வாகத் தெரியவில்லை. விலைக்கட்டுப்பாட்டு வர்த்தமானி அறிவித்தலால் மட்டும் விவசாயிகளுக்கு நன்மை கிடைத்துவிடும் என்றும் உறுதிப்படுத்த மு–டியாது. ஏற்கனவே கட்டுப்பாட்டு விலைகள் அறிவிக்கப்பட்ட எந்தப் பொருளையும் அந்த விலையில் சந்தையில் பெற முடிந்ததில்லை என்பதே கடந்த கால அனுபவம். எனவே இந்தப் பிரச்சினைக்கு கட்டுப்பாட்டு விலை, 10 சதவீத நெல்லைக் களஞ்சியப்படுத்துவது தவிர்ந்த வேறு பொறிமுறைகள் குறித்தும் ஆளும்தரப்பு சிந்திக்கவேண்டும். நடைமுறைப்படுத்தவேண்டும்.

# உலகத் தமிழர் போற்றும் நாடக பேராளுமை 'குழந்தை'

கலாநிதி தேவானந்த்

யாழப்பாணததின் மையப்பகுதியலில் இருக்கின்ற சிறிய முக்கியமான இடம் திருநெல்வேலி .இந்தப் பகுதி ஈழத்து நவீன நாடக வரலாற்றில் முக்கியமான பகுதியாக இனம்காணமுடியும்.

திருநெல்வேலியில் அமைந்துள்ள இவரது வீட்டை ஒரு நாடகத்திண்ணையென்று குறிப்பிட விரும்புகின்றேன அதில்; நாடக உரையாடல்கள் தினம் நடந்து வந்தன. குழந்தை ம.சண்மகலிங்கம் தனது 93 வது வயதில் கலமாகியிருக்கிறாா. அவர் உலகத் தமிழ் நாடக உலகில் வரலாறாகி நிற்பவர்.தனது நாடக எழுத்துருக்களால் உலகெங்கும் பேசப்படுபவர். இவரது நாடக எழுத்துருக்கள் இன்றும் இலங்கையின் பல பாகங்களிலும் உலகில் தமிழர்கள் வாழும் பல நாடுகளிலும் மேடையேற்றப்படுகின்றன. இந்த உயர்ந்த கலைஞரை குழந்தை மாஸ்ரர் என்று அன்பாய் அழைப்பது வழமை. இந்தக் குழந்தை தமிழ் நாடகத்திண்ணையின் பேறு என்று சொல்வதில் தவறொன்றும் இல்லை.



''அவா இல்லை வெறி இல்லை முடிஞ்சா செய்வம். சாதிக்க வேண்டும் என்ற பதற்றம்; இருந்ததில்லை இதனால் என்னால சிலதை சாதிக்க முடிந்தது என்று நினைக்கிறன்"

இது குழந்தை ம.சண்முகலிங்கத்தின் அமைதியான கருத்து.

உலகெங்கிலும் உள்ள தமிழர்கள் மத்தியில் நவீன தமிழ் நாடகத்துக்காக போற்றப்படுபவர் கலாநிதி குழந்தை ம. சுண்முகலிங்கம். தனது 90ஆவது வயதிலும் நாடகங்கள் எழுதுவதிலும் தயாரிப்பதிலும் நாட கவிடயங்களை தேடிக்கற்றுக்கொள்வதிலும் மிகவும் ஆர்வத்தோடும் துடிப்போடும் இருந்தவர். நாடகத்துறை சார்ந்த பல கட்டுரைகளை மொழிபெயர்ப்புக்களைத் தந்த பேராளுமை. இதுவரையில் நூற்றுக்கு மேற்பட்ட சுய ஆக்க நாடகங்களையும், 60க்கு மேற்பட்ட மொழிபெயர்ப்பு நாடகங்களையும் தமிழ் நாடக உலகிற்கு தந்திருப்பவர்.

நாடகம் பற்றிய உரையாடல்கள் தினமும் நடக்கின்ற ஒரு திண்ணை யாழ்ப்பாணத்தில் எங்கு இருந்தது என்று கேட்டால் நான் துணிந்து உரத்து சொல்வேன் குழந்தையவர்களின் வீட்டின் முன்னால் உள்ள திண்ணையென்று. பல்கலைக்கழகங்களில் அவ்வாறான உரையாடல்கள் ஆங்காங்கே நடக்க வேண்டும். கல்விக்கூடங்களிலே நடக்கவேண்டும். நாடகக் குழுக்கள் நிறுவனங்களில் நடைபெறவேண்டும் ஆனால் அவ்வாறு நடைபெறுவதில்லை மாறாக நாடகப் பரீட்சை பற்றியே ஒரு சில நேரங்களில் பேசிக்கொள்கிறார்கள். என்ன அபத்தமிது தானே தோன்றிய மனிதக்கலை பற்றி பேசுவதற்கும் விவாதிப்பதற்கும் ஒரு பொதுத்தளமின்றி நாடகக்கலை வளர்ந்திருக்கிறதே?

போகட்டும் விட்டுவிடுங்கள் இப்போதைக்கு மனதுக்கு ஆறுதல் தருவது நாடக உரையாடல்கள் தினமும் நடந்த 'நாடகத் திண்ணை' குழந்தை சணமுகலிங்கம் வீட்டில் இருந்திருக்கிறது என்பது தான். இதற்கு என்ன காரணம் அவரே சொன்னது போன்று "சாதிக்க வேண்டும், பதவியைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும், பட்டம் பெறவேண்டும் என்ற எந்தப் பதற்றமும் இல்லாமை' என்பதை குறிப்பிடலாம்.

இங்கு அவர் சொன்ன இன்னொன்றையும் நாம் கருத்தில் கொள்ளலாம். "நடிகனின் ஆளுமை முக்கியம் ஆனால் தன்னை வெளிப்படுத்தும் எண்ணம் இருக்கக்கூடாது'' இதை அவர் சொன்னது மேடையில் நிற்கும் நடிகனுக்கு மட்டுமல்ல வாழ்க்கையில் வெவ்வேறு வகிபாகங்களை நடிக்கின்ற நடிகனுக்கும் பொருந்தும்.



எந்த மேடைக்கும் விரும்பிப் போகாத மனிதன், மாலைக்காக கழுத்து நீட்டாதவர், புகழுக்காக அலைந்து திரியாதவர், தன்னை வெளிப்படுத்துவதற்காக விழா

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

காலைக்கதிர் Kalaikkathir

# உலகத் தமிழர்...

4ம் பக்கத் தொடர்ச்சி...........

எடுக்காதவர். எப்போதும் தன்னடக்கத்துடன் சுய விமர்சனத்துடன் வாழ்ந்த மனிதரை இனிக் காணமுடியாது என்பது கவலை தரும் விடயம். எதற்கெடுத்தாலும் 'பாராட்டி வாழ்த்துகின்ற புது யுகத்தில'; இப்படியொரு மனிதரா? என்று வியப்பாக இருக்கிறது. நான் அறிந்தவரை தான் விண்ணப்பிக்காது தன்னைத் தேடிவந்த பல விருதுகளைக்கூட எந்த ஆர்ப்பாட்டமும் இல்லாமல் சிறு கடிதமொன்றுடன் நிராகரித்தவர்.

'நாம் சுதந்திரமாக கௌரவமாக வாழும் சூழலொன்று உருவாகிய பின்னர் தான் நான் எந்நப் பட்டங்களையும் வாங்குவதாக உத்தேசித்துள்ளேன். உங்கள் கொரவத்ததை ஏற்றுக் கொள்ளவில்லை' என்றவாறாக கடிதத்தை எழுதிவிட்டு அமைதியாக இருந்திருக்கிறார். தனக்கு வழங்கப்பட்ட 'ஜனாதிபதி விருது', 'ஆளுநர் விருது' அடங்கலான மேலும் பல விருதுகளை அவர் நிராகரித்திருக்கிறார். அந்த நிராகரிப்புக்கள் எவற்றையும் பத்திரிகைகளுக்கு கொடுத்துபிரபல்யம்தேடிக்கொண்டதும்இல்லை. நாடகத் திண்ணையில் உரையாடும்போது மட்டும் பகிர்ந்து கொண்டிருக்கிறார். அவரது அனுமதியில்லாமல் இந்தத் தகவலை பகிர்ந்துகொள்ள வேண்டியுள்ளது என்பதையும் இங்கு சொல்லியாக வேண்டும்.

பெரும் கலைஞர்கள் என்று இன்று போற்றப்படுகின்றவர்கள்பலர்ஒன்றில்பட்டத்தை வாங்கி பிரபல்யமாக விரும்புகிறார்கள் அல்லது பட்டத்தை நிராகரித்து பிரபல்யமாகிறார்கள். ஆனால் குழந்தை மாஸ்ரருக்கு அவை எவைபற்றியும் கவலையில்லை தான் கொண்ட கொள்கையில் நிக்கிறேன் என்ற ஆத்மதிருப்திதான் அதற்குக் காரணமென்று நினைக்கிறேன். இதனால்தான் அவரது பெயருக்கு முன்னால் கலைப்பேரரசு கலைஞான கேசரி. கலையரசு என்ற சனசமூக நிலையங்கள் வழங்குகின்ற பட்டங்களைக்கூட காணமுடியவிலலை.

பேராசிரியர் கா.சிவத்தம்பி "குழந்தையின் நாடகங்களில் தீருநெல்வேலி செம்பாட்டு மண்ணின் வாசைனையிருக்கும்" என்று அடிக்கடி சொல்வார். இதனையே குழந்தையவர்கள் "அம்மாவுக்குள்ளால் எனக்குள் பண்பாடு கடத்தப்பட்டது" என்கிறார்.

குழந்தை ம.சண்முகலிஙகத்திற்கு நான்கு குழந்தைகள் மூன்று பெண் பிள்ளைகள் ஒரு ஆண் பிள்ளை. திருமணமாகி ஒரு பத்தாண்டுகள் உடுவிலில் வாழ்ந்ந போது நாடகத்துக்கு வராமல் அஞ்ஞாத வாசம் இருந்திருக்கிறார். இந்தக் காலத்தில் எந்த நாடக முயற்சியிலும் ஈடுபடாமல் இருந்திருக்கிறார். மீண்டும் உடுவிலில் இருந்து திருநெல்வேலிக்கு வந்ததும் மீண்டும் அவருள் கிடந்த நாடகம் உயிர்பெற்றதென்று அறியமுடிகிறது.

"என் வாழ்க்கைதிட்டம்போட்டுநகர்ந்ததில்லை" என்று சொல்லுகின்ற குழந்தையவர்களின் பிள்ளைகள் யாரும் இப்போ அவர் அருகில் இல்லை. அவரே நகைச்சுவையாக சொல்வார் "நான் கனடாவுக்கு பிள்ளைகள் பெற்றனான்" கனடாவில் உள்ள பிள்ளைகள் அங்கு வந்து இருக்குமாறு இவரைதினமும்வற்புறுத்தினார்கள். தாயத்தை விட்டு வெள்யேறுவதில்லையென்ற தன் கொள்கையுடன் இங்கேயே இருந்து இறந்திருக்கிறார். அதனைக்கூட அவர் எப்போதும் பறைதட்டிச் சொன்னது கிடையாது. மண்சுமந்த மேனியர் நாடகத்தில் வெளிநாடு போவோரை விமர்சித்தவர், தான் எழுதுவதற்கும் வாழ்வுக்கும் தொடர்பிருக்க வெண்டுமென்ற அடிப்படையில் வாழ்ந்தவர். கலையென்று வெளியில் ஏதோ படைத்துவிட்டு ஜதார்த்தத்தில் வேறாக வாழ்ந்துவிட்டு போகாமல்பேசுவதும் நடைமுறையும் ஒன்றாக இருக்க வேண்டும் என்று முயற்சிக்கிற ஒரு மனிதராகவே அவரைக்காண முடியும். இப்போதெல்லாம் இவ்வாறானவர்களை நாம் அருந்தலாகவே எம் மத்தியில் காண முடியும்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் படித்த குழந்தை ம. சண்முகலிங்கம் தன் பாடசாலை நாட்களைப் பற்றி இவ்வாறு குறிப்பிடுகிறார் ''பாடசாலைக் காலம் என்னைக்கண்டு பிடிக்கவில்லை. நானும் பாடசாலைக்காலத்தை பயன்படுத்தி என்னைக்கண்டு பிடிக்கவில்லை. இந்துக் கல்லூரி மைதானத்தில கால் பதிச்சதும் இல்லை. மேடையில ஏறினதும் இல்லை. ஒரு சாதாரண மாணவனாக இருந்தம்" 1931 ஒக்ரோபர் பதினைந்தாம் திகதி பிறந்த இவர், நீர்கொழும்பில் பத்து வயது வரை தன் தந்தை வேலை செய்த தென்னை எஸ்ரேட்டில அடிநிலை சிங்கள, தமிழ் மக்களோடு வாழ்ந்திருக்கிறார். நீர்கொழும்பில் தங்கொட்டுவ கிராமத்தில் வாழ்ந்த பசுமையான அனுபவத்தை அடிக்கடி நினைவுகூருவார்.

"கடைசிவரை சிங்களவரை வெறுக்க முடியாது. சிங்களவரை காணுகின்றபோது சந்தோசமாக இருக்கும்" என்ற அவரது கூற்று நிலைப்பாடு பேதம் கடந்த அவரது மானுடத்தை சொல்கிறது.

'நான் வாழ்ந்த கிராமத்தில் தமிழர்கள் இருந்தார்கள் அவர்களின் பேசும் தமிழ் வித்தியாசமானதாக இருந்தது போலவத்தை என்ற கிராமத்தில் தமிழ் பள்ளிக்கூடம் இருந்தது (1941) ஆனால் இன்று அவர்களின் பிள்ளைகளுக்கு தமிழ் தெரியாது. அங்கு தமிழ் பாடசாலையும் இல்லை" என்று ஆதங்கப்பட்டுக் கொள்வார்.

'1956ஆம் ஆண்டுக்குப் பின்னர் மெல்ல 'துவேசம்' வளரத் தொடங்கிச்சுது. அதுக்குப்பிறகு ரயிலில் பயணிக்க வெறுப்பாகவும் பயமாகவும் இருந்தது" என்றும் கூறுவார்

தென்னிந்தியாவில தனது மேற்படிப்புக்காக 1953 தொடக்கம் 1957 வஷ்ரை தங்கியிருந்து தனது பி.ஏ பட்டத்தை நிறைவு செய்து .பின்னர் 1958இல் செங்குந்தா இந்துக் கல்லூரியில் ஆசிரியராக இணைந்துகொள்கிறார். இதே ஆண்டில் கலையரசு சொர்ணலிங்த்தின் தொடர்பு கிடைக்கிறது.

புக்கத்து வீட்டு சுப்ஷ்பா அம்மானை பிரதிபண்ண வெளிக்கிட்டு புரோக்கர் கிழவனா நடிக்க ஆரம்பிச்சதுதான் இவரது நாடக ஆரம்பமாக அமைந்தது என்பதை அடிக்கடி நினைவுபடுத்திக்கொள்வார்.

"விருப்பமில்லாத வாய்ப்புக்கள் என்னை உருவாக்கியது. நாடக அரங்கக் கல்லூரி உருவாக்கிய பிறகு ஊர் நாடகக்காரராக இருந்நநிலை மாறி எழுத்தாளர் வட்டத்துக்க வந்தம்'' என்று தனது வளர்ச்சி பற்றிக் குறிப்பிடுகிறார்.

''ஏஸ்.ஏ.விக்கிரமசிங்க (கொமினிஸ்ட்), பீற்றக்கெனமன் (கொமினிஸ்ட்) என்.எம்.பெரேரா (சமசமாசக் கட்சி) போன்ற கொமினிஸ்ட் கட்சித் தலைவர்களின்ர பேச்சுக்களைக் கேட்க விருப்பம். ஆனால் அரசியல் கட்சிகளில் ஈடுபாடு இல்லை. கொள்கைகளில் விருப்பம். இந்த கட்சிகளின் இறுக்கங்கள் உடன்பாடாக இல்லை.செயல்முறை அரசியல் இல்லை" என்று தன் அரசியல் ஆர்வம்பற்றி குறிப்பிட்டிருக்கிறார்.

# மாணவர்களின் கல்விக்கு வறுமை தடையாகக்கூடாது

## வடக்கு ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு






மாணவர்களின் கல்விக்கு வறுமை ஒருபோதும்தடையாகஅமைந்துவிடக்கூடாது எனவடக்குமாகாணஆளுநர்நா.வேதநாயகன் தெரிவித்தார்.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வசிக்கும் தேவையுடைய 217 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு, யாழ்ப்பாணம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் சா.சுதர்சன் தலைமையில் வியாழக்கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஆளுநர், பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கிவைத்தார்.

அவர் தனது உரையில் -

கல்வி வாழ்க்கைக்கு முக்கியமானது. கல்வியில்லாதவர்கள் இரண்டு கண்களும் இல்லாதமைக்கு சமனானவர்கள். நான் யாழ். மாவட்டச் செயலராக இருந்த காலத்தில் பல பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுடன் என்னை சந்திக்க வந்திருக்கின்றார்கள். பிள்ளைகள் கற்பதற்கு ஆர்வமாக இருந்தபோதும் அவர்களுக்கு சீருடைகள், கற்றல் உபகரணங்கள் இல்லாமல் இருக்கின்றன.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவர்கள் கல்வியைக் கைவிடக்கூடாது.

வறுமையிலிருப்பவர்களுக்குஉதவுவதற்கு எமக்கு எந்தவொரு சுற்றறிக்கைகளும் தடையாக இருக்கப்போவதில்லை. நாம் சரியானதை சரியாகச் செய்தால் எதற்கும் பயப்படதேவையில்லை. யாழ்ப்பாண பிரதேச செயலர் சுதர்சன், ஏனைய பிரதேச செயலர்களிலிருந்து வித்தியாசமானவர். இன்றுஉங்களுக்கானகற்றல்உபகரணங்களை அவர் பெற்றுத் தந்திருக்கின்றார். வறுமையைப்போக்க அவர் எடுக்கும் நடவடிக்கைகள் சிறப்பானவை.

கல்வியில் சிறந்த நிலைக்கு நீங்கள் வருவதே, இன்று நீங்கள் பெற்றுக்கொள்ளும் உதவிக்கு பிரதியுபகாரமாக அமையும். அவ்வாறுஉயர்ந்தநிலைக்கு வந்து ஏனையவர்களுக்கு உதவி செய்யவேண்டும். கடினமாக உழைத்தால் எதையும் செய்ய முடியும். உங்களால் முடியும் என்று நினைத்து எதையும் செய்யுங்கள். நீங்கள் வெற்றியடைந்தவர்களாக மாறலாம், என அவர் தனது உரையில் தெரிவித்தார்.

# சம்மாந்துறையில் களவாடப்பட்ட மோ.சைக்கிள் மீட்பு



(பாறுக்ஷிஹான்)

ஜனவரி முதல் வாரத்தில் திருடிச்செல்லப்பட்ட மோட்டார் சைக்கிள் மீட்கப்பட்டுள்ளதுடன் சந்தேக நபரும் கைது செய்யப்பட்டுள்ளார் என சம்மாந்துறை பொலிஸார் குறிப்பிட்டனர்.

இச்சம்பவம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புறநகர் பகுதியில் ஜனவரி முதல் வாரத்தில் இடம்பெற்றுள்ளதுடன் திருடிச் செல்லப்பட்ட மோட்டார் சைக்கிள் உரிமையாளரால் முறைப்பாடும் அன்றையதினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

குறித்த முறைப்பாட்டிற்கமைய விசாரணைகளை மேற்கொண்ட சம்மாந்துறை பொலிஸார் பொத்துவில் பிரதேசத்தில் குறித்த மோட்டார் சைக்கிள் உட்பட சந்தேக நபரையும் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளதுடன் களவாடப்பட்ட பல லட்சம் ரூபா பெறுமதியான 'கீறோ பசன்புறோ' என்ற வகையான மோட்டார் சைக்கின் உட்பட சந்தேக நபரான கல்முனைக்குடி பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய சந்தேக நபரையும் கைது செய்துள்ளனர்.

மேலும் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி ஏ.எம். நௌபர் வழிகாட்டுதலில் பொலிஸ் நிலைய பெருங் குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி கே.சதீஸ்கர் தலைமையிலான பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சம்மாந்துறை வாய்க்கால் வீதியை சீரமைக்குமாறு மக்கள் கோரிக்கை

(தில்சாத் பர்வீஸ்)

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பிரதேச செயலாளர் பிரிவு உட்பட்ட கல்லரிச்சல் பகுதியில் இருந்து சம்மாந்துறை பொலிஸ் நிலைய பிரதான வீதியை இணைக்கும் எஸ் வாய்க்கால் வீதியை புனர்நிர்மாணம் செய்து தருமாறு பிரதேசவாசிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 2024.11.26 திகதி பெய்த கனமழை காரணமாக பாதிக்கப்பட்ட குறித்த வீதியைப் பற்றி உரிய அதிகாரிகளிடம் தெரியப்படுத்தியும், எவரும் நடவடிக்கை எடுக்கவில்லை என பிரதேச வாசிகள் குற்றம்சாட்டுகின்றனர்.

செட்டவட்டை, பூரான் புட்டி வட்டை போன்ற வயல் பிரதேசங்களுக்கு செல்லும் பிரதான பாதை இதுவாகும்.

அதுமட்டுமின்றி, இப் பகுதியில் காணப்படும் பொதுமக்கள் இவ்வீதியின் ஊடாக பாடசாலை, வைத்தியசாலை, பொலிஸ் நிலையம், பிரதேச செயலகம் போன்ற இடங்களுக்கு இப்பாதையை பயன்படுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதற்கு முதல் பெய்த கனமழை காரணமாக, பல வயல் நிலங்கள் பாதிக்கப்பட்டு இருந்தது, அதிகாரிகள் பலர் நீரில் மூழ்கிய நிலங்களை பார்வையிட்டு சென்ற போதும், இது வரை எந்த நஷ்ட ஈடும் அரசாங்கம் வழங்கவில்லை என விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் மற்றும் பிரதேசவாசிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.









# முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையின் வளப்பற்றாக்குறை அமைச்சின் கவனத்திற்கு

## கொண்டுசென்றார் ரவிகரன் எம்.பி.



முல்லைத்தீவு மாவட்ட பொதுவைத்தியாசாலையில் காணப்படும் வளப் பற்றாக்குறைகள் தொடர்பில் தாம் சுகாதார அமைச்சின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளதாக துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் எதிர்வரும் நாள்களில் பிரதமருடைய கவனத்திற்கும் தாம் கொண்டுவந்து முல்லைத்தீவு மாவட்ட பொதுவைத்தியசாலையில் நிலவும் சிக்கல் நிலைமைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று பிரதேசஅபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று இடம்பெற்றது. இக்கூட்டத்தில் முல்லைத்தீவு மாவட்ட பொதுவைத்தியசாலையில் நிலவும் வளப்பற்றாக்குறைகள் தொடர்பில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளால் சுட்டிக்காட்டப்பட்டது.

இந் நிலையில் இதுதொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

முல்லைத்தீவு மாவட்ட பொதுவைத்தியசாலை வைத்தியசாலை நிர்வாகத்தினர் அண்மையில் என்னைச் சந்தித்து, வைத்தியசாலையிலுள்ள வளப்பற்றாக்குறை தொடர்பில் கலந்துரையாடினர்.

அந்தவகையில் முல்லைத்தீவு மாவட்ட பொதுவைத்தியசாலையில் கண்வைத்தியர் இல்லாதநிலைமை, ஆண் நோயாளர்களுக்கானதும், பெண் நோயாளர்களுக்குமான விடுதிப் பற்றாக்குறையால் நோயாளர்களைப் பராமரிப்பதில் ஏற்பட்டுள்ள சிக்கல் உள்ளிட்ட வைத்தியசாலையின் பல்வேறு வளப் பற்றாக்குறை தொடர்பில் வைத்தியசாலை நிர்வாகத்தினர் என்னிடம் சுட்டிக்காட்டியிருந்தனர்.

அத்தோடு வைத்தியசாலையில் நிலவும் இந்த வளப் பற்றாக்குறைகள் தொடர்பிலான மகஜர் ஒன்றினையும் வைத்தியசாலை நிர்வாகத்தினர் என்னிடம் கையளித்திருந்தனர்.

இந் நிலையில் இது தொடர்பில் நானும் சகநாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கமும் சேர்ந்து குறித்த வைத்தியசாலை பிரச்சினை தொடர்பில் சுகதாரா அமைச்சின் கவனத்திற்கு கொண்டுவந்தோம்.

இது தொடர்பில் எதிர்வரும் நாடாளுமன்ற அமர்வுகளின்போது பிரதமருடையகவனத்திற்கும் கொண்டுவரவுள்ளேன்.

அந்தவகையில் முல்லைத்தீவு மாவட்ட பொதுவைத்தியசாலையில் காணப்படும் பிரச்சினைகளைத்தீர்ப்பதற்கு தொடர்ந்தும் கவனம் செலுத்தப் படுமெனத் தெரிவித்தார்.

உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள் ஆரம்பம் 22.01.2025
கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



•CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
•NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)
கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்
தகுதி:
•வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
•ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
•GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி
JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY
340, Pointpedro Road, Jaffna.
தொடர்பு:070 7070 722

# மட்டக்களப்பில் நேற்று ஆர்ப்பாட்டம்

*மியான்மார் ரோஹிங்கிய அகதிகளை நாடு கடத்தும் தீர்மானத்தை அரசு மீள் பரீசீலனை செய்யக்கோரி மட்டக்களப்பு நகர் ஜாமிஉஸ் ஸ்லாம் ஜும்ஆ மஸ்ஜித் பள்ளிவாசல் முன்னால் நேற்று பொது மக்கள் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.*

*மட்டக்களப்பு விவசாய சம்மேளனம் ரோஹிங்கிய அகதிகளை நாடுகடத்தும் இந்த அரசின் தீர்மானத்தை எதிர்த்து பள்ளிவாசலுக்கு முன்னால் ஒன்று கூடுமாறு அழைப்பு விடுத்ததையடுத்து ஸ்ரீ லங்கா முஸ்லீம் காங்கரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.நழீம், விவசாய சம்மேளன தலைவர் சுந்தரேசன் உட்பட பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.*

*ரோஹிங்கிய அகதிகளை துன்புறுத்தும் மியான்மாருக்கு திருப்பி அனுப்பாதே, இலங்கை அரசே சர்வதேச சட்டங்களை அமுல்படுத்து, யு.என்.எச்.சி.ஆர். அப்பாவி மியான்மார் அகதிகளை பொறுப்பெடுத்து புகலிடம் கொடுக்கும் நாடுகளுக்கு பராப்படுத்து, மியான்மாரில் மேலும் ஒரு இலட்சம் அகதிகள் படையெடுப்பார்கள் என்ற பீதியை கிளப்பாதே, போன்ற பல வாசகங்கள் ஏந்தியவாறு கவனயீர்ப்பு ஆர்பாட்டம் முன்னெடுக்கப் பட்டது.*

## ஜனநாயக ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தன்மை மற்றும் சட்டத்தின் ஆட்சியை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட மேலும் சீர்திருத்தங்களை ஜனாதிபதியும் புதிய ஆளும்தரப்பும் செயல்படுத்துவார்கள் என்று நம்புவதாகவும் அது தெரிவித்துள்ளது.

தற்போதுள்ள நிலையில், இலங்கையை ஆதரிக்க ஐரோப்பிய ஒன்றியம் தயாராக உள்ளதென ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பு தூதுக்குழுவின் தலைமைக் கண்காணிப்பாளர் நாச்சோ சான்செஸ் அமோர் தெரிவித்தார்.

2024 செப்டம்பர் 21 இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் குறித்த தனது இறுதி அறிக்கையை ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புக்குழு நேற்று வெளியிட்டது.

கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஜனாதிபதித் தேர்தல் குறித்த இறுதி அறிக்கையை வெளியிட்டு வைத்து உரையாற்றிய ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பு தூதுக்குழுவின் தலைமை கண்காணிப்பாளர் நாச்சோ சான்செஸ் அமோர்,

ஜனாதிபதித் தேர்தல் குறித்த அறிக்கையானது நாடு தழுவிய ரீதியில் 9 மாகாணங்களிலும் முன்னெடுக்கப்பட்ட கண்காணிப்பை அடிப்படையாகக் கொண்டது. இரண்டு மாத காலத்தில் இந்த அறிக்கை பூரணப்படுத்தப்பட்டது. முழு தேர்தல் செயல்முறையின் விரிவான பகுப்பாய்வு மற்றும் மதிப்பீட்டை இந்த அறிக்கை வழங்குகிறது.

இந்த அறிக்கையின் ஒரு பகுதியாக, ஜனநாயகத் தேர்தல்களுக்கான இலங்கையின் சர்வதேச உறுதிப்பாடுகளுக்கு ஏற்ப, எதிர்கால தேர்தல் செயன்முறைகளை வலுப்படுத்துவதையும் செம்மைப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்ட 16 பரிந்துரைகள் முன்மொழியப்பட்டுள்ளன.

இலங்கையின் ஜனநாயகப் பயணத்தில் ஒருகுறிப்பிடத்தக்கமைல்கல்லையும் அறகலய போராட்டத்திற்கு பின்னரான அரசியல் இயல்புநிலையை மீட்டெடுத்தமையையும் 2024 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் குறித்து நிற்கின்றது.

பொதுமக்கள் ஜனநாயக செயல்முறைக்கான தங்கள் அர்ப்பணிப்பை இதன்போது வெளிப்படுத்தியுள்ளனர். அதே நேரத்தில் இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழு அனைத்து முக்கிய தேர்தல் காலகட்டங்களிலும் வெளிப்படைத்தன்மையை உறுதிசெய்துள்ளது.

தேர்தல் காலங்களில் தேர்தல்கள் ஆணைக்குழுவானது சுயாதீனமாகவும் உறுதியுடனும் செயல்பட்டது. தேர்தல் அமைதியாக இடம்பெற்றமையும் வேட்பாளர்கள் முடிவுகளை ஏற்றுக்கொண்டமையும் இலங்கையின் ஜனநாயக நிறுவனங்களின் சக்தியை அடிக்கோடிட்டுக் காட்டியது.

தேர்தல் பிரசார நிதியில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட குறிப்பிடத்தக்க சீர்திருத்தங்கள் மற்றும் வாக்காளர் பட்டியலில் இளைஞர்களை அதிக அளவில் இணைப்பது உள்ளிட்ட பல சிறந்த முன்னேற்றங்களை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

ஒட்டுமொத்தமாக, தேர்தல் சட்டகட்டமைப்பு நன்கு வளர்ச்சியடைந்துள்ளதாகவும், தேர்தல் ஆணைக்குழு மற்றும் சிவில் சமூகத்தின் கூட்டு ஈடுபாடு தேர்தலுக்கு சிறந்த பங்களிப்பை வழங்கியுள்ளமை அறிக்கையின் மூலம் தெளிவாக காணக்கூடியதாக உள்ளது.

தேர்தல் பரப்புரைக் காலங்களில் அடிப்படை சுதந்திரம் மதிக்கப்பட்டதுடன் வாக்காளர்கள் தங்களது விருப்பத்திற்கமைய வேட்பாளர்களை தெரிவு செய்ய உண்மையான அரசியல் மாற்று வழிமுறைகளைக் கொண்டிருந்தனர்.

இலங்கையின் ஜனநாயகத்தின் மீள்தன்மையை ஜனாதிபதித் தேர்தல் உறுதிப்படுத்தியுள்ளதுடன் நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறும் தன்மை மற்றும் சட்டத்தின் ஆட்சியை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட மேலும் சீர்திருத்தங்களை ஜனாதிபதியும் புதிய ஆளும்தரப்பும் செயல்படுத்துவார்கள் என்று நாங்கள் நம்புகிறோம். தற்போதுள்ள நிலையில், இலங்கையை ஆதரிக்க ஐரோப்பிய ஒன்றியம் தயாராக உள்ளது - என்றார்.

அரசியலில் பெண்களின் பங்கேற்பை அர்த்தமுள்ள வகையில் மேம்படுத்துவதையும், அரசவளங்களை தவறாகப் பயன்படுத்துவதற்கு எதிராக அமுலாக்க வழிமுறைகளை வலுப்படுத்துவதையும் ஐரோப்பிய ஒன்றியத்தின் இறுதி அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

நிகழ்நிலை காப்புச் சட்டம் மற்றும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் உள்ளிட்ட கட்டுப்பாட்டுச் சட்டங்களை நீக்குவதன் மூலம் கருத்துச் சுதந்திரத்தைப் பாதுகாக்கவும், மாற்றுத்திறனாளி வாக்காளர்களுக்கான அணுகலை மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை மேலும் வலியுறுத்தவும் இந்த அறிக்கை அழைப்பு விடுத்துள்ளது.

## மின்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலியுறுத்தப்பட்டுள்ளது.

வீட்டுப் பாவனைக்கான மின் கட்டணம் முதல் 30 அலகுகளுக்கும் 20 சதவீதமும் 31 முதல் 60 அலகுகளுக்கு 29 சதவீதமும் 61 முதல் 90 அலகுகளுக்கு 28 சதவீதமும் 91 முதல் 180 அலகுகளுக்கு 18 சதவீதமும் 180 அலகுகளுக்கு மேற்பட்டவற்றுக்கு 19 சதவீதமும் குறைக்கப்படவுள்ளன.

பொதுத்தேவைக்கான மின அலகுகளுக்கு 12 சதவீதமும் அரச நிறுவனங்களுக்கு 11 சதவீதமும் ஹோட்டல் துறைக்கு 31 சதவீதமும் கைத்தொழில் துறைக்கு 30 சதவீதமும் மத தலங்களுக்கு 21 சதவீதமும் வீதி விளக்குகளுக்கு 11 சதவீதமும் மின்கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன.

இந்த மின்கட்டண திருத்தம் எதிர்வரும் ஆறுமாத காலத்தை வரையறுத்து குறைக்கப்பட்டுள்ளது. ஆறு மாதத்துக்கு பின்னர் மின்கட்டணம் மீண்டும் திருத்தம் செய்யப்படும்.

## கலைப்பேராளுமை ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர் 1931 ஒக்ரோபர் பதினைந்தாம் திகதி திருநெல்வேலியல் பிறந்தவர். நீர்கொழும்பில் தங்கொட்டுவ கிராமத்தில் தன் தந்தை வேலை செய்த தென்னை எஸ்ரேட்டில் வளர்ந்தவர். இங்கு அடிநிலை சிங்கள தமிழ் மக்களோடு வாழ்ந்திருக்கிறார். ஆங்கிலம், தமிழ், சிங்களம் மூன்று மொழிகளிலும் புலமையுள்ளவர். நூற்றுக்கு மேற்பட்ட சுயஆக்க நாடகங்களையும் அறுபதிற்கு மேற்பட்ட மொழிபெர்ப்பு நாடகங்களையும் ஈழத்தமிழ் நாடக உலகிற்குதந்த பேராளுமை. இவரது ஆற்றலும் ஆளுமையுமே நாடகமும் அரங்கியலும் என்ற பாடத்துறை தமிழில் வளர்ச்சியடையக் காரணமாக அமைந்தது.

ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றதன் பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நாடகமும் அரங்கியலும் துறையை உருவாக்குவதில் பேராசிரியர் கா. சிவத்தம்பியுடன் இணைந்து பணியாற்றியவர். நாடகம் கல்வியாக வரவேண்டும் அதனைக் கற்றறிந்து செய்யவேண்டும் என்பதை வலியுறுத்தியவர். ஜீ.சி.ஈ. உயர்தரத்தில் நாடகம் ஒரு பாடமாகக் கொண்டுவரப்பட்டதில் அவரது பங்களிப்பு முக்கியமானது. இதற்காக இலவசமாக நாடகத்தை பல ஆண்டுகள் கற்பித்தவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நாடகமும் அரங்கியலும் பாடம் ஒரு துறையாக வளர்ச்சியடைந்துள்ளதென்றால் அதற்கு மூல காரணமானவர் குழந்தை ம. சண்முகலிங்கம்.

மாணவர்கள் கற்பதற்காக ஏராளமான ஆங்கில நூல்களை தமிழில் மொழிபெயர்த்துள்ளார். யாழ்ப்பாண தேசிய கல்வியியல் கல்லூரியில் நாடகமும் அரங்கியலும் பாடத்தை ஆரம்பிக்க இவரது பணிமுக்கியமானது. ஆசிரியர்களுக்கான நாடகக் களப்பயிற்சிகள் பலவற்றை நடத்தி ஆசிரியர்களை நாடகத்துறையில் உருவாக்கியவர். இவருக்கு நீண்ட மாணவர் பரம்பரை உண்டு. இவரது தனி முயற்சியால் பல இளைஞர்கள் நாடகத்தைக் கற்று தேர்ந்து ஆசிரியர்களாகப் பணியாற்றுகிறார்கள். இவரது நாடகங்கள் சமூக அரசியல் நிலைமைகளைப் பேசியிருக்கின்றன. தனது கருத்துக்களை நாடகத்தினூடாக சொல்வதில் எந்த சமரசத்துக்கும் செல்லாதவர். இவரது முக்கியமான நாடகங்களாக 'மண்சுமந்த மேனியர்', 'எந்தையும்தாயும்', 'அன்னையிட்ட தீ', 'ஆர்கொலோ சதுரர்', 'கூடிவிளையாடு பாப்பா', 'பஞ்சவர்ண நரியார்' போன்ற பலவற்றைக் குறிப்பிடலாம். இவரது நாடகப் பணியைப் போற்றி கிழக்குப் பல்கலைக்கழகம் இவருக்கு கௌரவ கலாநிதி பட்டடம் வழங்கி கௌரவித்துள்ளது. இவரது இழப்பு ஈழத்து நாடக உலகிற்கு ஈடுசெய்ய முடியாதது. தனிமனிதனாக தன்னலம் கருதாது நாடகமும் அரங்கியலும் துறைக்கு அளப்பெரிய பணியை ஆற்றியிருப்பதோடு, பல்கலைக்கழக நாடகத்துறையை உருவாக்கி வளர்த்த பெருமைக்குரியவர். இவரது பணியை கௌரவிக்கும் முகமாக இவரது உடல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழத்தில் அஞ்சலிக்காக வைக்கப்படவேண்டும் என்று கலை ஆர்வலர்கள் பல்கலைக்கழக நிர்வாகத்திடம் கோரிக்கையை முன்வைத்துள்ளார்கள்.

## நெல்லை ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திசாநாயக்க பாதுகாப்பு அமைச்சிற்கு அறிவுரைகளை வழங்கியுள்ளார்.

இதன்போது நெல் சந்தைப்படுத்தல் சபை மற்றும் சதொச நிறுவனத்திற்கு சொந்தமான களஞ்சியசாலைகளை புதுப்பிப்பதற்கு தேவையான, முப்படைகளின் உதவிகளை பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மாத இறுதிக்குள், பெரும்போக நெல் கொள்முதல் நடவடிக்கைகள் ஆரம்பமாவதற்கு முன்பு களஞ்சியசாலைகளின் புதுப்பித்தல் பணிகளை நிறைவுறுத்த தேவையான உதவிகளை வழங்கவும் அவற்றிற்கு தேவையான பாதுகாப்பை வழங்கவும் பாதுகாப்பு அமைச்சு இணக்கம் தெரிவித்துள்ளது.

## அரசியல்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுயநிர்ணய உரித்திற்குரிய தேசிய இனம்.

பொங்கு தமிழ் மக்கள் எழுச்சிப் பிரகடனத்தின் 24ஆம் ஆண்டு நாள் நிகழ்வுகள் நேற்று யாழ். பல்கலைக்கழக பொங்கு தமிழ் நினைவுத் தூபி முன்பாக நடைபெற்றது. பொங்கல் நிகழ்வுகளுடன் நிகழ்வுகள் தொடங்கின. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் நிகழ்சி நடைபெற்றது.

நினைவு நாள் உரையாற்றிய மாணவர் ஒன்றியச் செயலாளர் சிவகஜன் தெரிவித்ததாவது:

அரசமைப்பின் 13ஆவது திருத்தம், ஏக்கிய ராஜ்ஜிய அரசமைப்பு என்பவற்றினால் தமிழ் மக்களின் அரசியல் வேணவாக்களை குழிதோண்டிப் புதைக்கும் முயற்சிகளை அரசியற் கட்சிகள் எதிர்க்க வேண்டும் என்றும், அனைத்துத் தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத் திட்டத்தினை முன்னகர்த்துவதற்கு தமிழ்த் தேசியக் கட்சிகள், ஐக்கிய முன்னணி ஒன்றினை அமைத்துப் பணியாற்றவேண்டும்.

திம்புக் கோட்பாடு, பொங்கு தமிழ்ப் பிரகடனம் என்பவற்றை நீர்த்துப்போகச் செய்வதன் ஊடாக தமிழ் மக்களின் விடுதலை வேட்கையினை இல்லாதொழித்து தமிழ்த் தேசிய நீக்கத்தினை முன்னெடுப்பதற்கு இலங்கை ஆட்சிகள் முனைப்போடு பணியாற்றிக்கொண்டிருக்கின்றன. ஆக்கிரமிப்புக்களாலும், அச்சுறுத்தல்களாலும் மேற்கொள்ளப்படமுடியாத தமிழ்த் தேசிய நீக்கத்தை தமிழ்த் தலைவர்கள் எனும் பெயரால் தமிழ்த் தேசியப் போலிகளை தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக்கி அவர்களூடாக முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றன.

ஒற்றையாட்சிக்குட்பட்ட அரசமைப்புத் திருத்தத்தை நீக்கப்போகின்றோம் எனும் உரையாடலின் ஊடாக அதிகாரப் பகிர்வோடு எவ்விதத்திலும் தொடர்பற்றதொன்றை வலுமிக்கதொன்றாகக் காண்பிக்கும் தோற்றப் பொலிவை உருவாக்க சிறிலங்கா அரசு முனைப்புக் காட்டுகின்றது. நல்லாட்சிக் காலத்தில் வரையப்பட்ட 'ஏக்கியராஜ்ஜிய' எனும் ஒற்றையாட்சி அரசமைப்பு வரைபினை தமிழ் மக்களின் பிரதிநிதிநிதிகளை ஏற்றுக்கொள்ளச் செய்வதனூடாக முன்னெடுப்பதற்கான முனைப்புக்கள் இடம்பெற்ற வண்ணம் உள்ளன.

தமிழ்த் தேசியம் தேர்தல் அரசியலிற்கு அப்பாலானதொன்று. தமிழ்த் தேசியக் கட்சிகள் மக்களாணையை மீறிய கடந்த கால செயல்களின் விளைவே அவர்களின் நாடாளுமன்றத் தேர்தலில் அவர்களிற்கு ஏற்பட்ட ஆசனங்களின் குறைவிற்குக் காரணமாகும். அவர்களின் ஆசனங்களின் இருப்பானது ஒருபோதும் தமிழ்த் தேசியத்தின் இருப்பை பிரதிபலிக்கப் போவதுமில்லை, வீழ்ச்சியடையச் செய்யப்போவதுமில்லை. தமிழ்த் தேசியத்தை தேர்தல் அரசியலிற்கு அப்பால் மக்களை அரசியற்படுத்தி, அணிதிரட்டி மக்கள் அரசியலை முன்னெடுக்க தமிழ்த் தேசிய அரசியற் கட்சிகள் தவறிவிட்டன.

2009 இற்குப் பின்னர் தனியே அரசியல் விடுதலையை மட்டும் நோக்கிச் சிந்தித்தமையே பின்னடைவுகளிற்குக் காரணமாகும். சமூகவிடுதலை, பெண்ணிய விடுதலை, வர்க்க விடுதலை என்பவற்றில் கவனம் செலுத்தாமல் தமிழ்த் தேசிய எழுச்சியை வெளிப்படுத்த முடியாது. நாங்கள் அடையாள அரசியலிற்கு உரிய மக்கள் கிடையாது. நாங்கள் இறைமை அரசியலை முன்னெடுப்பதற்குரிய, சுயநிர்ணய உரித்திற்குரிய தேசிய இனம்.

தற்போதைய ஜேவிபி ஆளும்தரப்பு வலி. -வடக்கில் காணி விடுவிப்புக்களை முன்னெடுக்காது தேசிய பொங்கல் நிகழ்வினை வலி-. வடக்கிலேயே முன்னெடுக்கின்றமையானது தமிழ் மக்களை மடையர்கள் என்றெண்ணிச் செயலாற்றுவதாகும். செயல் அரசியலிற்கு அப்பால் இந்த ஜேவிபி அரசு செய்தி அரசியலை நம்பியே ஆட்சிக்கு வந்தது, ஆட்சியை நடத்துகின்றது. ஒரு சில வீதித் தடைகளை

தொடர்ச்சி 9ம் பக்கம்....

## அரசியல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டும் நீக்கிவிட்டு, இராணுவத்திடமுள்ள காணிகளை விடுவித்து விட்டதாக சமூக வலைத்தளங்களைநம்பிநுண்பரப்புரையில் ஈடுபட்டு வருகின்றது - என்றார்.

## அரிசிப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

சந்தையில்ஏற்பட்டுள்ளஅரிசிபிரச்சினைக்கு தீர்வுகாண எடுத்துவரும் நடவடிக்கை தொடர்பில் அவர் கருத்துத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் தற்போது தலைதூக்கி இருக்கும் அரிசி பிரச்சினை இன்னும் இரண்டு வாரங்களே இருக்கும். அதன் பின்னர் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும். தற்போது நாட்டின் ஒவ்வொரு பகுதிகளிலும் விவசாயிகள் நெல் அறுவடை செய்யத் தொடங்கியுள்ளனர். ஆளும்தரப்பு என்ற வகையில் நாங்கள் விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்வனவு செய்வோம். சிறிய, நடுத்தர ஆலை உரிமையாளர்களும் விவசாயிகளிடமிருந்துநெல்லைகொள்வனவு செய்யத் தேவையான ஏற்பாடுகளை ஆளும்தரப்புச் செய்திருக்கின்றது. அதனால் அரிசி பிரச்சினையில் இருந்து நாங்கள் வெளியில் வருவோம்.

இந்த நாட்டில் அரிசி மாபியாக்கள் நவம்பர், டிசெம்பர் மற்றும் ஜனவரி ஆகிய மூன்று மாதங்களிலேயே செயற்படுவார்கள். இந்த காலப்பகுதியிலேயே நாட்டுக்செள் அரிசி இறக்குமதி செய்யப்படுகிறது. இந்த காலப் பகுதியிலேயே நாட்டில் அரிசி விலை அதிகரிக்கப்படுகிறது. அதேபோன்று இந்த காலப்பகுதியலேயே நாட்டில் அரிசி காணாமல் போகிறது. அதனால் எதிர்காலத்தில் இந்த காலப்பகுதியில் இவ்வாறு நடக்க இடமளிக்கப்போவதில்லை.

அதனால் ஆளும்தரப்-பு என்ற வகையில் விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யும் ஒரு கதிர் நெல்லைக்கூட விற்னை செய்யப்போவதில்லை. அந்த நெல்லை அரிசியாக்கி பொது மக்களுக்குக் குறைந்த விலையில் விற்பனை செய்வோம். தற்போது நாட்டில் ஏற்ட்டிருக்கும் அரிசிப் பிரச்சினை நாங்கள் ஏற்படுத்தியது அல்ல. நாங்கள் அதிகாரத்துக்கு வருவதற்கு முன்னர் இருந்தது. என்றாலும் ஆளும்தரப்பு என்வகையில் அதனை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். இந்த வருட இறுதியில் மீணடும் இதே பிரச்சினை ஏற்பட்டால் அது எங்களால் ஏற்படுத்தப்பட்ட பிரச்சினையாக மாறும், அந்த பொறுப்பை நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிவரும். அதனால் அரிசி பிரச்சினை நாட்டில் மீண்டும் ஏற்படுவதற்கு நாங்கள் இடமளிக்கப்போவதில்லை - என்றார்.

# நெல் விலை அடுத்த வாரம் வர்த்தமானியில்

நெல்லுக்கான உத்தரவாத விலை மற்றும் அரிசிக்கான கட்டுப்பாட்டு விலைகள் தொடர்பிலான வர்த்தமானி அடுத்த வாரம் வெளியிடப்படுமெனவர்த்தக,வாணிப,உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

அவர் கொழும்பில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டபின்னர், செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார் அவர் இதுபற்றி மேலும் தெரிவித்ததாவது:

சந்தையில்நிலவும்அரிசித்தட்டுப்பாட்டுக்குத் தீர்வு காண்பதற்கு ஆளும்தரப்பு உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லையெனக் குற்றஞ்சாட்டுவோர், அரிசித்தட்டுப்பாட்டுக்கான காரணிகளைக்குறிப்பிடுவதில்லை. வருடாந்தம் 40 இலட்சம் மெற்றிக் தொன் நெல் உற்பத்தி செய்யப்படுகின்றபோதும் அவற்றில் 10,000 மெற்றிக் தொன் அளவிலான நெல்லே ஆளும்தரப்பால்கொள்வனவுசெய்யப்படுகிறது.

2023 மற்றும் 2024 ஆம் ஆண்டு காலப்பகுதியில் விவசாயிகளிடமிருந்து சுமார் 5,000 மெற்றிக் தொன் அரிசியையே ஆளும்தரப்புக் கொள்வனவு செய்தது. அத்துடன் நெல்லை கொள்வனவு செய்து அவற்றை களஞ்சியப்படுத்தி வைக்கும் வசதி ஆளும்தரப்பிடம் இருக்கவில்லை. இவ்வாறான காரணிகளால்தான், தற்போது அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

அரசுக்குச் சொந்தமான நெற்களஞ்சியங்களைபுனரமைப்பதற்குஉரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். இம்முறை பெரும்போக அறுவடையின் போது விவசாயிகளிடமிருந்து 3 லட்சம் மெற்றிக் தொன் வரையிலான நெல்லை கொள்வனவு செய்வோம்.

நெல்லுக்கான உத்தரவாத விலை மற்றும் அரிசிக்கான கட்டுப்பாட்டு விலை தொடர்பிலான வர்த்தமானி அடுத்தவாரம் வெளியிடப்படும். விவசாயிகளையும், நுகர்வோரையும் பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

பிரதான அரிசி உற்பத்தியாளர்களிடம் ஆளும்தரப்பினரிடம் அடிபணிந்துள்ளதாக எதிர்க்கட்சிகள் குறிப்பிடுவது முற்றிலும் பொய்யானது. அரிசி தட்டுப்பாட்டுக்கு நிலையான தீர்வு காண்பதே ஆளும்தரப்பின் பிரதான நோக்கம்.

விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்வனவு செய்து அதனை அரிசியாக்கி சாதகமான விலைக்கு சந்தைக்கு விநியோகிப்பதற்கான திட்டங்களைச் செயற்படுத்தி உள்ளோம் - என்றார்.

## அட்டாளைச்சேனையில் மேற்கொள்ளப்பட்ட

# 5 கோடி ரூபாய் வேலைத்திட்டங்களில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் கேள்வி

(அபு அலா)

கடந்த 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் அதி விஷேட வர்த்தமானியின் பிரகாரம் ரணில் விக்ரமசிங்கவால் நடைமுறைப்படுத்துப்பட்ட சுமார் 05 கோடி ரூபா பெறுமதியான வேலைத்திட்டங்களில் ஒலுவில் - 01, அல்- ஹிரா நகர், ஆலிம் நகர் போன்ற பிரதேசங்களில் 16 கிறவல் வீதிகள் அபிவிருத்தி செய்யும் பணியில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் கேள்வியெழுப்பினார்.



அட்டாளைச்சேனை பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் ஒருங்கிணைப்பு குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.ஆதம்பாவா தலைமையில் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அஷ்ரப் தாஹிரால் குறித்த அட்டாளைச்சேனை பிரதேச வீதிகள், வடிகான்கள் அபிவிருத்தி சம்பந்தமாக முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. இதுதொடர்பில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

குறித்தவிடயம்தொடர்பில்அதன் தகவல்களையும், விளக்கங்களையும், ஒருங்கிணைப்பு குழு தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஆதம்பாவாவிடம் இரண்டு வாரங்களுக்குள் சமர்ப்பிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேற்படி அபிவிருத்திகள் தொடர்பில் பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபையில் எவ்வித அனுமதிகளும் பெறப்படவில்லையென தெரியவந்ததுடன்கிறவல்வீதிகளுக்கு மேலால் மீண்டும் கிறவல்களைப் போட்டு மக்கள் வரிப்பணத்தை மோசடி செய்துள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.







# யாழ். பல்கலையில் பொங்குதமிழ் பிரகடன 24 ஆவது ஆண்டு எழுச்சிநாள் நிகழ்வுகள்!



பொங்குதமிழ் பிரகடனத்தின்24ஆவதுஆண்டு எழுச்சிநாள் நிகழ்வுகள் நேற்று (வெள்ளிக்கிழமை) யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

பொங்குதமிழ்ப் பிரகடன பொதுநினைவுத்தூபிக்கு முன்பாக நடைபெற்ற பொங்குதமிழ் பிரகடன உரையினை தொடர்ந்து, பொங்குதமிழ் தூபிக்கு மலர் தூவி வணக்கம் செலுத்தப்பட்டது.

இதில்மாணவர்கள்,யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஊழியர்கள் கலந்துகொண்டனர்.

17.01.2001 அன்று தமிழ் மக்களின் அபிலாஷைகளான சுயநிர்ணய உரிமை, மரபுவழித் தாயகம், தமிழ்த் தேசியம் என்பன அங்கீகரிக்கப்படவேண்டும் என பொங்குதமிழ் பிரகடனம் செய்யப்பட்டமைகுறிப்பிடத்தக்கது.



# கிளிநொச்சி ஊடகவியலாளர் தாக்குதல்: உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

## பதில் பொறுப்பதிகாரி உறுதி

கிளிநொச்சியில் ஊடகவியலாளர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுடன் தொடர்புபட்டவர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என கிளிநொச்சிபொலீஸ்நிலையத்தின்பதில் பொறுப்பதிகாரி உறுதியளித்துள்ளார்.

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலக பிரிவிலுள்ள சிரேஸ்ர ஊடகவியலாளர் சுப்பிரமணியம் பாஸ்கரன் அவர்கள் மீது 15ஆம் திகதி புதன்கிழமை காலை தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் பொருள்களுக்கும் சேதம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

செய்தியாளர் பாஸ்கரனை தலைக்கவசத்தால் தலையில் தாக்கப்பட்டாமை தொடர்பாகவும் பொருள்களுக்கு சேதம் ஏற்படுத்தப்பட்டுள்ளமை தொடர்பாகவும்கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில்புதன்கிழமைமுறைப்பாடு பதிவு செய்யப்பட்டதையடுத்து சம்பவ இடத்தை பொலிஸார் நேரில் சென்று பார்வையிட்டதுடன் சம்பவத்துடன் தொடர்பு பட்ட இரண்டுசந்தேகநபர்களைபுதன்கிழமை கைது செய்திருந்தனர்.

குறித்த தாக்குதல் சம்பவத்தை பொலிஸார் திசை திருப்பும் நோக்கில் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளருக்கு எதிராக புதன்கிழமை மாலை போலியான முறைப்பட்டை பதிவு செய்து கொண்டதுடன் ஏற்கனவே கைது செய்யப்பட்டிருந்த தாக்குதல் மேற்கொண்ட இரண்டு பேரில் ஒருவரை குறித்த சம்பவத்திலிருந்து விடுவித்து மற்றைய ஒருவரையே வியாழக்கிழமை மாலை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியிருந்தனர்.

இதனை அடுத்து வியாழக்கிழமை மாலை இச்சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தின் கடமையிலுள்ள பதில் பொறுப்பதிகாரிக்கு தெரியப்படுத்தப்பட்டதை அடுத்து குறித்த சம்பவம் தொடர்பாக நடந்த விடயத்துக்கு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மன்னிப்பு கோரியதுடன் குறித்த விடயம் தொடர்பாக மீள முறைப்பாடு பதிவு செய்யுமாறு கோரிதையடுத்து முறைப்பாடு செய்யப்பட்டு உள்ளது.

மற்றையசந்தேகநபரைஉடனடியாக கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதுடன் அவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு தான் உறுதி அளிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.



# 'தூய ஸ்ரீ லங்கா' திட்டத்தின் உறுப்பினர்களில் தமிழர்கள் உள்வாங்கப்படாமை வேதனையே

## சிறிநேசன் எம்.பி. காட்டம்



'தூய ஸ்ரீலங்கா' என்பது ஒரு வரவேற்கத்தக்க விடயம். கடந்த ஆட்சியில் இடம்பெற்ற மனித குலத்துக்கு எதிரான பல செயற்பாடுகளை இந்த கிளீன் ஸ்ரீலங்கா தண்டிப்பதாக இருக்க வேண்டும். அதனை நடைமுறைப்படுத்தும் உறுப்பினர்களில் தமிழர்கள் உள்வாங்கப்படவில்லை என்பது ஒரு வேதனையான விடயம் என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில் -

கிளீன் ஸ்ரீலங்கா என்பது சிறிய விடயங்களில் கவனம் செலுத்தாமல் இலஞ்சம், ஊழல், அதிகார துஷ்பிரயோகம், ஆட்கடத்தல், கொலைகள், மனித குலத்துக்கு எதிரான செயற்பாடுகள் என்பவற்றை கட்டுப்படுத்தக்கூடிய வகையில் இந்த கிளின் சிறிலங்கா திட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு.

கடந்த ஆட்சியில் இடம்பெற்ற பல செயற்பாடுகளை இந்த கிளீன்ஸ்ரீலங்காதண்டிப்பதாக இருக்க வேண்டும். இந்த கிளின் ஸ்ரீலங்கா திட்டத்தில் நடை முறைப்படுத்தும் உறுப்பினர்களில் தமிழர்கள் உள்வாங்கப்படவில்லை என்பது ஒரு வேதனையான விடயம். இவ்வாறான குறைபாடுகள் தவிர்க்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

கடந்த காலத்தில் இடம்பெற்ற இனவாதம் மதவாதம்அற்றசெயற்பாடுகள் இந்த திட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

75 ஆண்டுகள் புரையோடிப்போன இந்த விடயங்களை உடனடியாக தீர்ப்பது என்பது சாத்தியமற்ற விடயம். இருப்பினும் அரசாங்கம் பக்கச்சார்பின்றி தமது செயற்பாடுகளை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

புதிய அரசாங்கத்தை மக்கள் ஓரளவு நம்புகின்றார்கள். கடந்த காலங்களில் ஏற்பட்ட குறைபாடுகளை தவிர்த்து செயற்பட்டால் இவர்களை தமிழ் மக்கள் நம்புவார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

# பாடசாலைக்கு எழுது பலகைகள்

(கேதீஸ்)

கிறேட்வெஸ்டன் உதவும் கரங்கள் அமைப்பின் அனுசரணையில் தலவாக்கலை கிறேட்வெஸ்டன் பாடசாலைக்கு அதன் ஆசிரியர் கேதீஸ் ஊடாக வெண் பலகைகள் மற்றும் பச்சை நிற பலகைகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

கிறேட்வெஸ்டன் உதவும் கரங்கள் அமைப்பின் செயற்பாட்டாளர் மனோஜ் மற்றும் அதன் உறுப்பினர்களால் பாடசாலையின் அதிபரிடம் இவ்வெண்பலகைகள் மற்றும் பச்சை நிற பலகைகள் கையளிக்கப்பட்டன.

மேலும் பாடசாலை அதிபரிடம் பெயர் பொறிக்கப்பட்ட நினைவு கேடயமும் வழங்கப்பட்டது. மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளை சீராக மேம்படுத்துவதற்காக இவ்வெண் பலகைகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம். பாரிஸ், பிரதி அதிபர் இளங்கோ, கிறேட்வெஸ்டன் உதவும் கரங்கள் அமைப்பின் உறுப்பினர்கள் மனோஜ் மற்றும் அதன் உறுப்பினர்கள் கலந்துக்கொண்டனர்.

அத்துடன் இப்பாடசாலையில் நிலவும் ஏனைய குறைபாடுகளையும் மிகவிரைவில் நிவர்த்தி செய்வதாகவும் கிறேட்வெஸ்டன் உதவும் கரங்கள் அமைப்பினர் பாடசாலை நிர்வாகத்திடம் உறுதியளித்துள்ளனர்.

# திருவள்ளுவர் குடியிருப்பு மாதிரி கிராமம் கிளிநொச்சியில் திறந்து வைக்கப்பட்டது

## 24 குடும்பங்கள் பயனடைவு

இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மற்றும் நகர மேம்பாடு, கட்டுமானம் மற்றும் வீட்டுவசதி அமைச்சர் அனுரகருணாதிலக ஆகியோர் இணைந்து கிளிநொச்சியில் திருவள்ளுவர் குடியிருப்பு மாதிரி கிராமத்தை நேற்று (வெள்ளிக்கிழமை) திறந்து வைத்தனர்.

இந்த திட்டத்தின் மூலம் சுமார் 24 குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

நகர மேம்பாடு, கட்டுமானம் மற்றும் வீட்டுவசதி துணை அமைச்சர் டி.பி. சரத், தேசிய வீட்டுவசதி மேம்பாட்டு ஆணையத்தின் தலைவர் மற்றும் மூத்த அதிகாரிகள், கிளிநொச்சி மாவட்ட செயலாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

மாதிரி கிராம வீட்டுவசதி திட்டம் இந்திய அரசின் மானிய நிதி உதவியின் கீழ் இலங்கையின் நகர மேம்பாடு, கட்டுமானம் மற்றும் வீட்டுவசதி அமைச்சகத்துடன் இணைந்து தீவின் 25 மாவட்டங்களிலும் செயற்படுத்தப்படுகிறது.

இந்தத் திட்டத்திற்கான ஒப்பந்தம் 2017 ஆண்டு ஒக்ரோபர் மாதம் கையெழுத்திடப்பட்டது.

இந்தத் திட்டம் இலங்கையில் உள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான வீட்டு வசதிகளை பெற்றுக் கொடுக்கின்றது.

இந்தத் திட்டத்தின் கீழ் இதுவரை 12 மாவட்டங்களில் மாதிரி கிராமங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு, வவுனியா, யாழ்ப்பாணம், கண்டி, கம்பஹா, அநுராதபுரம், பதுளை, மாத்தளை, புத்தளம், கொழும்பு, திருகோணமலை, மொனராகலை ஆகிய மாவட்டங்களிலேயே இந்த மாதிரி கிராமங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

மீதமுள்ள மாதிரி கிராமங்களும் விரைவில் திறந்து வைக்கப்பட்டுக் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு ஒப்படைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.






# 13இல் கை வைக்கோம் என்ற அரசின் முடிவுக்கு வரவேற்பு

## ஐக்கிய காங்கிரஸ் கட்சி தெரிவிப்பு

(அஷ்ரப்கான்)

13 ஆவது திருத்தச்சட்டத்தில் நாம் கைவைக்கமாட்டோம் என அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளமையை ஐக்கிய காங்கிரஸ் கட்சி வரவேற்றுள்ளதுடன் இக்கூற்றின் மூலம் வடக்கும் கிழக்கும் மீண்டும் இணைக்கப்படமாட்டாது என்ற நம்பிக்கை எமக்குள்ளது எனவும் தெரிவித்துள்ளது.

இது பற்றி ஐக்கிய காங்கிரஸ் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்துள்ளதாவது -

இனப்பிரச்சினைக்கு தீர்வான 13 ஆம் திருத்த சட்டத்தை அரசு நடைமுறைப்படுத்தும் என இந்தியாவின் தமிழ் நாட்டில் வைத்து பகிரங்கமாக சொன்ன துணிச்சலுக்காக அமைச்சர் சந்திரசேகரை நாம் பாராட்டுகின்றோம்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வாக கொண்டு வரப்பட்டதே 13 ஆவது திருத்தச் சட்டமாகும்.

இச்சட்டத்தின்படி வடக்கும் கிழக்கும் ஒரு வருடத்துக்கு தற்காலிகமாக இணைக்கப்பட்டு வடக்கு கிழக்கு மாகாண சபைக்கு தேர்தல் நடத்தப்பட்டது.

ஒப்பந்தப்படி தற்காலிகமாக இணைக்கப்பட்ட வடக்கும் கிழக்கும் ஒரு வருடத்தில் பிரிந்து மீண்டும் இணைய வேண்டுமாயின் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டிருக்க வேண்டும்.

மாகாண சபை முறைக்கு விடுதலைப்புலிகளின் எதிர்ப்பால் சபை கலைக்கப்பட்டது.

அதன் பின் மஹிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்குவதற்கு முழு ஒத்துழைப்பும் வழங்கிய ஜேவிபி, மஹிந்த காலத்தில் நீதி மன்ற வழக்கின் மூலம் வடக்கும் கிழக்கும் நிரந்தரமாக பிரிக்கப்பட்டு இரு மாகாணங்களுக்கும் தனித்தனியாக தேர்தல் நடத்தப்பட்டது.

பின்னர் கடந்த நல்லாட்சிக்காலத்தில் ரணில், சுமந்திரன், ரவூப் ஹக்கீம், ரிசாத் பதியுதீன் போன்றோர் மாகாண சபை தேர்தலை இல்லாதொழிப்பதற்காக புதிய தொகுதிவாரி தேர்தல் முறையை நாடாளுமன்றத்தில் சட்டமாக்கியதால் இன்று வரை மாகாண சபை தேர்தல் நடக்கவில்லை.

எம்மைப்பொறுத்தவரை மாகாண சபை முறைமை என்பது எந்த பிரயோசனமும் இல்லாத, அரசுக்கும் வீண் செலவை உருவாக்கி, தமிழ் மக்களையும் முஸ்லிம்களையும் மோதவிடும் முறையாகும்.

ஆனாலும் இந்தியாவை நமது நாடு பகைக்க முடியாது என்ற பூகோள அரசியலின் யதார்த்தத்துக்கிணங்க வடக்கும் கிழக்கும் மீண்டும் இணையாத வகையில் 13 ஆவது திருத்த சட்டப்படி மாகாண சபைத்தேர்தலை தேசிய மக்கள் சக்தி அரசு மேற்கொள்ளும் என ஐக்கிய காங்கிரஸ் கட்சி எதிர்பார்க்கிறது. - என்றுள்ளது.



# பாடசாலையில் மாணவன் திடீர் சுகவீனமுற்று இறப்பு

## பூலாச்சேனை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் சம்பவம்

(சியாஜ்)

கற்பிட்டி பூலாச்சேனை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தரம் 6 இல் கல்வி பயிலும் எம் மஸாப் என்ற மாணவன் வியாழக்கிழமை பாடசாலையில் வைத்து திடீர் சுகவீனம் உற்ற நிலையில் உடனடியாக மாம்புரி வைத்தியாசலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.



மேற்படி உயிரிழந்த மாணவனின் சடலம் மேலதிக மருத்துவ பரிசோதனைக்காக புத்தளம் தள வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# அரசியல் கைதிகளென எவரும் சிறையில் இல்லை என்று கூறுவார்களாயின் அவர்களை காணாமலாக்கியது யார்?

## அருட்தந்தை சத்திவேல் கேள்வி

அரசியல் கைதிகள் என எவரும் சிறையில் இல்லை என்று கூறுவார்களாயின், அவர்களை காணாமலாக்கியது யார் என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் கேள்வியெழுப்பியுள்ளார்.

நேற்று வெளியிட்டுள்ள தனது ஊடக அறிக்கையில் இவ்வாறு தெரிவித்தவர், அதில் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு -

சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளை அரசியல் தீர்மானம் எடுத்து நிபந்தனை இன்றி விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதும் பயங்கரவாத தடை சட்டம் நீக்கப்பட வேண்டும் என்பதும் தமிழர்களின் மிக நீண்டகால அரசியல் கோரிக்கையாகும்.

தமிழர் தாயக மண்ணான வவுனியாவில் ஜனாதிபதி தேர்தல் பிரசார மேடையில் நின்று தற்போதைய ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க அவர்கள் நாம் பதவிக்கு வந்தால் அரசியல் கைதிகளை விடுதலை செய்வோம். இதற்கு தெற்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என உறுதியளித்து சென்றதன் ஈரம் காயும் முன்னே அவர் அரசாங்கத்தின் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் அவர்கள் அரசியல் கைதிகள் என்று சிறைகளில் எவரும் இல்லை என்று குறிப்பிட்டுள்ளமை அவர்களின் அரசியல் அநாகரிகத்தை அம்பலப்படுத்தி உள்ளதோடு வாக்களித்த தமிழர்களையும் ஏமாற்றி தமிழர்களின் அரசியலை அவமானப்படுத்தி உள்ளமையை வன்மையாக கண்டிக்கின்றோம்.

ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் அரசியல் கைதிகள் உள்ளனர். அவர்களை விடுதலை செய்வோம் என்று கூறி பதவிக்கு வந்ததும் அரசியல் கைதிகள் என்று எவரும் சிறையில் இல்லை எனக் கூறுவார்களாயின் அவர்களை காணாமல் ஆக்கியது யார்?

இதற்கு முன்னரும் மக்கள் விடுதலை முன்னணியின் செயலாளர் ரில்வின் சில்வா அவர்கள் பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் இருப்பவர்கள் மீது நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்றே குறிப்பிட்டிருந்தார்.

அவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்று குறிப்பிடப்படவில்லை. இது அரசாங்கத்துக்குள் பிளவையே வெளிப்படுத்துகிறது? தமிழர்களின் அரசியல் சார்ந்த விடயங்களில் எந்த ஒரு துளி நகர்வையேனும் தேசிய மக்கள் சக்தி மேற்கொள்ளப் போவதில்லை என்பதும் இதன் மூலம் தெளிவாகிறது.

கடந்த கால ஆட்சியாளர்களைப் போல் பேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் தமிழர்களின் அரசியலை பயங்கரவாதத்துக்குள் முடக்கி பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தண்டனை பெற்றுக் கொடுத்து சிங்கள பௌத்த பேரினவாதத்தை மகிழ்விக்கவே முன் நிற்கிறது என்பது தெளிவாகிறது.

தற்போது சிறைகளில் 10 பேருக்கும் குறைவான அரசியல் கைதிகளே உள்ளனர். இவர்களில் மரண தண்டனை கைதிகளும் உள்ளனர். இவர்களை பயங்கரவாதத் தடை சட்டத்துக்கு வெளியே எடுத்து விடுதலை செய்யக்கூடாது என்பதில் பேரினவாத ஆட்சியாளர்கள் உறுதியாக உள்ளதோடு; தண்டனை காலத்தையும் கடந்து சிறையில் வாடும் அவர்களின் வாழ்வை சிறைக்குள்ளேயே கொலை செய்வதற்கும் முயற்சிப்பதாகவே தோன்றுகிறது.

கடந்த காலங்களில் அரசியல் கைதிகள் தங்கள் விடுதலையை வலியுறுத்தி சிறைக்குள் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்தனர். சாகும் வரையான உண்ணாவிரத போராட்டத்தையும் தொடர்ந்தனர். இவர்களின் விடுதலைக்காக தமிழர் தாயகத்திலும் கொழும்பிலும் சிங்கள மக்களின் ஆதரவோடு பல்வேறு வடிவங்களில் விடுதலைக்கான முயற்சிகள் மேற்கொண்டபோதும் அது எல்லாம் பலன் அளிக்கவில்லை.

நல்லாட்சி எனக் கூறப்படும் மைத்திரி - ரணில் ஆட்சிக்காலத்தில் அமைச்சுப் பதவிகள் இருந்த தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களும், எதிர்க்கட்சியில் அமர்ந்து அரச சுகபோகங்களை அனுபவித்த தமிழ் தேசிய கூட்டமைப்பும் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக ஆக்கப்பூர்வமான செயற்பாடுகள் எதிலும் ஈடுபடவில்லை என்பதை வேதனையோடு மீண்டும் வெளிப்படுத்துவதோடு அரசியல் கைதிகள் விடயத்தில் இவர்களும் ஆட்சியாளர்களின் சிந்தனையிலேயே இருந்தனர் என்பதே உண்மை.

விடுதலைக்கான நீலி கண்ணீரையே வடித்தனர். தற்போது எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு அரசியல் கைதிகளைவிடுதலைசெய்யவேண்டும்எனஊடகங்களுக்கு கூறுவது அரசியல் ஏமாற்று நாடகமே.

தமிழர் அரசியல் விடுதலைக்கான செயற்பாட்டினை போராளிகளும் மாவீரர்களும் அரசியல் கைதிகளும் உயிர்ப்புடன்வைத்திருந்தனர்.இன்றும்வைத்திருக்கின்றனர் (சோரம் போனவர்களைப் தவிர ஏனையோர்) என்பதை மறக்க முடியாது. இவர்களைத் தவிர்த்து அல்லது மறந்து விடுதலை அரசியல் செய்வது என்பது அரசியல் கொலைக்கு ஒப்பாகும்.

அரசியல்கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி வடக்கு கிழக்கு எங்கும் முன்னெடுக்கப்படும் கையெழுத்துப் போராட்டம் மேலும் வலுப்பெற வேண்டும். இது குறுகிய அரசியல் நோக்கத்துக்கு அப்பால் நிகழ வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு.

இதற்கு வடக்கு, கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தி தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஜனாதிபதிக்கும் அரசாங்கத்துக்கும் அழுத்தம் கொடுத்து விடுதலையை துரிதப்படுத்த வேண்டும் எனவும் தமிழர்களின் அரசியல் எதிர்பார்ப்புக்கு எதிராக செயற்பட வேண்டாம் எனவும் கேட்டுக் கொள்கின்றோம்.

அத்தோடு பொருளாதார வீழ்ச்சியிலிருந்து நாட்டை மீட்கவென பல்வேறு நாடுகளிடம் மண்டியிட்டு நாட்டின் இறைமையை, அரசியலை, வளங்களை தாரைவார்த்து சமரசம் பேசி பல்வேறு நாடுகளுடன் ஒப்பந்தம் செய்யும் ஆட்சியாளர்கள் (மிக அண்மையில் இந்தியாவோடும் தற்போது சீனாவுடன் செய்துகொண்டிருக்கின்ற பந்தங்கள் உட்பட) இந்நாட்டில் மிக நீண்ட கால வரலாற்று பாரம்பரியங்களை கொண்ட தேசிய இனமான தமிழர்களோடு அரசியல் ஒப்பந்தம் செய்ய தயங்குவது ஏன்?

நாட்டின் எதிர்கால நலன் கருதி தமிழர்களின் அரசியல் அபிலாசைகளோடு முன்செல்ல அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்து ஆட்சியாளர்கள் தம் நல்லெண்ணத்தை வெளிப்படுத்த வேண்டும் எனவும் கேட்கின்றோம் என அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.01.2025இல் வெளியிடப்பெற்றது